Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 7 ஜூலை 2012

தனிப் பிரதி ரூ. 9/-



## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

* திருமறை ஆசான் இதழை தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு இதழ் நிறுத்தப்படும்.
* இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.
* திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 – 10:30 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 – 7:15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 – 7:30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........................................ 1
2. ஏன் அஸ்திபாரம் மிக முக்கியமானதாக இருக்கிறது? .................... 9
3. பெண்கள் பகுதி ........................................ 14
4. வாலிபர் பகுதி ........................................ 17
5. சிறுவர் பகுதி ........................................ 19
6. நிழலும், நிஜமும் ........................................ 21
7. ஒரு சபை பல இடங்களில் .............. 27
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........................ 30


* ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
* முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
* இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
* M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசம் & தொலைபேசி எண்ணை கண்டிப்பாக எழுதவும்.
* அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 JULY 2012 Issue - 7


ஆசிரியர் உரை

## சமாரியர்களின் மதம்

மதம் என்னும் இம்மூன்றெழுத்து வார்த்தை வசீகரத்தன்மை கொண்டதாயிருந்து, இப்பூவுலகில் வாழும் மிகப் பெரும்பான்மையான வர்களை ஈர்த்துத் தன் ஏகபோக கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ஆம், ஏதாவது ஒரு மத நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டு அல்லது ஈடுபாடு கொண்டு, தங்களை ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்ளாதவர்கள் உலகளவில் மிகச் சிறுபான்மையினராகவே உள்ளனர். மதம் என்னும் சொல்லுக்கு இப்படிப்பட்ட ஈர்ப்பு இருக்கிறபடியால் தான், உலகெங்கும் இன்றைக்கு 21 பிரதான மதங்கள் நடைமுறையில் இருந்து வருகிறது. இவைகளில் சில மதங்கள் சர்வதேச அளவிலும், எஞ்சியவைகள் பிராந்திய அளவிலும் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டி வருகிறது. பிறப்பாலும், வளர்ப்பாலும், போதனையாலும் இப்படி மதங்களின்பால் தங்களை ஏதாவது ஒரு வகையில் இணைத்துக்கொண்டவர்கள், பொதுவாக தாங்கள் சார்ந்திருக்கும் மதத்தின் கோட்பாடுகளில் ஈடுபாடும், பிடிப்பும், வைராக்கியமும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

உலகில் காணப்படும் மதங்களில், வானத்தின் கீழிருக்கிற சகல நாடுகளிலும் பரவி, மொத்த மக்கள் தொகையில் மிகப்பெரும்பாலான வர்களால் பின்பற்றப்படும் கிறிஸ்தவம், முதன்மையான மதம் என்று உலக மக்களால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், உண்மையில், கிறிஸ்தவம் என்பது ஒரு மதமல்ல. கிறிஸ்தவம் ஒரு மார்க்கம், அது ஓர் உன்னத மார்க்கம், மேல் உலகப் பெருவாழ்வுக்கான ஒரு வழிகாட்டி. கிறிஸ்தவம் என்றழைக்கப்படுவதற்குக் காரணமாக உள்ள கிறிஸ்துவானவர், இப்பூமியில் நம்மைப் போல ஒரு மானிடராய் வாழ்ந்து, போதனை செய்த நாட்களில், "*....நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்*" [யோவான் 14:6] என்றே கூறியுள்ளார். "நானும்" என்று சொல்லாமல், "நானே" என்று கூறியுள்ளதைக்

கூர்ந்து கவனிக்க வேண்டும். ஆக, ஏனைய மதங்களில் ஒன்றாக கிறிஸ்தவத்தை ஒருபோதும் பார்க்கக் கூடாது.

சரி, இம்மாதம் நம் ஆசிரியர் உரையை அலங்கரிக்கும் "சமாரியர்களின் மதம்" இந்நாட்களில் உலகின் பல பகுதிகளிலோ அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியிலோ நடைமுறையிலிருக்கும் ஒரு மதம் அல்ல. அதேவேளையில், இந்த மதம் உலக வரலாற்றில் ஒருபோதும் இருந்திராத ஒரு மதமும் அல்ல. ஏறக்குறைய 2600 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு தேசத்து மக்களால் கைக் கொள்ளப்பட்ட ஒரு மதம். இம்மதத்தின் நம்பிக்கைகள் மிகச் சிறப்பானதென்பதற்காகவோ அல்லது இம்மதத்தில் தங்களை ஈடுபடுத்தியவர்கள் பக்தி காரியங்களில் தேறினவர்கள் என்பதற்காகவோ இத்தலைப்பு இம்மாதத்திற்காகத் தெரிந்தெடுக்கப்படாமல். மாறாக, இவர்களைப் போல் நாம் ஒருபோதும் இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

சமாரியர்களின் மதம் பற்றியும், இம்மதத்தார் பற்றியும் தெரிந்து கொள்வதற்கான நம் முயற்சிக்கு வலுசேர்க்கும்படியாக, நம்முடைய வழக்கத்தின்படி தேவையான பின்னணித் தகவல்களைப் பார்த்து விடுவோம்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் சிகரம் தொட்ட ராஜாவாகத் திகழ்ந்த தாவீதின் குமாரனாகிய சாலமோனின் நாட்களுக்குப் பிறகு, ஒன்றுபட்ட ராஜ்ஜியமாக விளங்கிய இஸ்ரவேல் வடக்கு, தெற்கு என்று இரண்டாகப் பிரிந்து போனது [II ராஜா 12:19,20]. இப்படிப் பிரிந்த வடக்கு "இஸ்ரவேல்" என்றும், தெற்கு "யூதா" என்றும் அழைக்கப் பட்டது. வட பகுதியாகிய இஸ்ரவேலின் தலைநகரமாக ஒரு கட்டத்தில் மாறிய பட்டணம் தான் சமாரியா. ஒட்டு மொத்த வடக்கு ராஜ்ஜியமும் சமாரியா என்று வேதாகமத்தால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. [II ராஜா. 21:1]. பட்டணமாக இல்லாமல் ஒரு வனமாகக் காட்சி தந்த இந்த மலை சேமேர் என்பவன் கையிலிருந்து இரண்டு தாலந்து வெள்ளிக்கு விலைக் கிரையமாக உம்ரி என்னும் ராஜாவால் வாங்கப்பட்டது. அதன் பிறகு உம்ரியால் பலமான கோட்டைகள் கட்டப்பட்டு, பின்னாளில் அரணான பட்டணமாக உருவெடுத்தது. [I ராஜா 16:24,29].

உம்ரியின் மரணத்துக்குப் பிறகு, துன்மார்க்கத்தில் தன் தகப்பனுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்த ஆகாப் ராஜா, சீதோனின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி, பெண் இனத்திற்கே இழிவு சேர்த்த யேசபேலை மணம் முடித்த பாவம் போதாதென்று, முந்தானைப் பித்தனாக மாறி அவள் வழி நின்று பாகாலை வணங்கியதோடு, சமாரியாவில் பாகாலுக்கு ஒரு கோவிலையும் கட்டினான் [1 ராஜா 16:30,32]. இப்படி விக்கிரக வணக்கத்திலும், துன்மார்க்க வாழ்விலும் இஸ்ரவேலாகிய சமாரியா மிதமிஞ்சிப் போனபடியால், ஒரு 120 ஆண்டுகளுக்கு மேல் அது தனி நாடாகத் தொடர தேவன் அனுமதிக்க வில்லை. சரித்திரத்தின் பக்கங்களில் அது மறைந்து போனது.

ஆம், ஏலாவின் குமாரனாகிய ஓசெயா, இறைவழிபாட்டில் இருண்டு போயிருந்த இஸ்ரவேலின் ராஜாவாக இருந்தபோது, அசீரியா ராஜாவாகிய சல்மனாசார், இஸ்ரவேலுக்கு விரோதமாக வந்து தனக்கு

அடங்காத குற்றத்தை ஓசெயாவினிடத்தில் கண்டு, அவனைக் கட்டி சிறையில் அடைத்து, தேசத்தையும், தலைநகரமாகிய சமாரியாவையும் மூன்று வருடம் முற்றிகை போட்டான். பிறகு இஸ்ரவேலை வென்று, தேசத்தின் குடிகளை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோய், அவர்களை தேசத்தின் பல்வேறு பகுதிகளில் குடியமர்த்தினான். [II ராஜா 17:1,6]. இஸ்ரவேலர் செய்யத்தகாத காரியங்களை யெகோவாவுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் விரோதமாகச் செய்ததற்கான விலையை இதன் மூலம் கொடுத்தார்கள். அசீரியா ராஜா, சமாரியர்களை நாடு கடத்தின தோடு நில்லாமல், ஏற்பட்ட காலியிடத்தை நிரப்புவதற்குத் தன் ஆளுகைக்குட்பட்ட பாபிலோன், கூத்தா, ஆயி, ஆமாத், செப்பர்வாயீம் என்னும் இடங்களிலிருந்து மனிதர்களை வரவழைத்து சமாரியாவிலும், சமாரியாவின் பட்டணங்களிலும் குடியேற்றினான் [II ராஜா. 17:24,25]. இதன் மூலம் சமாரியா, கலப்பினம் கொண்ட தேசமாக மாறிப்போனது. அதுமாத்திரமா? பக்திக் காரியங்களிலும் இவர்கள் நிலை படு பாதாளத்துக்குச் சென்று விட்டது.

இப்படி சமாரியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டவர்கள் கர்த்தருக்குப் பயப்படாததால், கர்த்தர் சிங்கங்களை அவர்களுக்குள்ளே அனுப்பி சிலரைக் கொன்று போட்டார். [II ராஜா. 17:25] பயந்து போன இந்த அந்நிய ஜனங்கள், அசீரியா ராஜாவிடம் தங்கள் பாதுகாப்புக்காக முறையிட்டபோது, சமாரியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஓர் ஆசாரியனை இறக்குமதி செய்து கொள்ளுங்கள். அவன் அந்த தேசத்து தேவனுடைய காரியங்களை உங்களுக்குப் போதிக்கக்கடவன் என்று கட்டளையிட்டான். அதன்படி, ஓர் ஆசாரியன் வந்து பெத்தேலில் குடியிருந்து கர்த்தருக்குப் பயந்து நடக்க வேண்டிய விதத்தை அவர்களுக்குப் போதித்தான் [II ராஜா. 17:26,28]. *இப்படி ஆசாரியனின் போதனையையும் கேட்டுக் கொண்டு, தாங்கள் குடியேறின பட்டணங்களில் விக்கிரகங்களுக்கான கோவில்களையும் கட்டினார்கள்.* அத்தோடு, தங்கள் விக்கிரக கோவில்களில் தங்களுக்காக ஆராதனை செய்வதற்கு தங்களுக்குள் ஈனமானவர்களை ஆசாரியர்களாகவும் ஏற்படுத்தினார்கள். ஆஹா! எவ்வளவு புத்திசாலிகள்? [17:32]. வசனம் மேலும் சொல்வ தைக் கொஞ்சம் தான் கவனியுங்களேன். *அப்படியே கர்த்தருக்குப் பயந்தும், தாங்கள் விட்டு வந்த ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களையும் சேவித்து வந்தார்கள்* [II ராஜா. 17:33]. இதுதான் சமாரியர்களின் மதம். எவ்வளவு ஓர் அற்புதமான மதம்! இப்படிப்பட்ட ஒரு மதத்தை எங்காவது பார்க்க முடியுமா?

பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு போகப்பட்ட யூதர்கள் அடிமைத்தனத்திலிருந்து கி.மு. 536ல் திரும்பி வந்தபோது, இஸ்ரவேலர்கள் கலப்பினமாக மாறிப்போனதையும், பக்தி ரீதியாகப் படு குழியில் விழுந்து போனதையும் கண்டு சமாரியர்களை முழுப் பகையாகப் பகைத்தார்கள். இந்தப் பகை இயேசுவின் காலம் வரை நீடித்தது. இயேசுவின் நாட்களில் சமாரியா, கலிலேயோ பகுதிகளைச் சேர்ந்த 10 குஷ்டரோகிகளைக் குணப் படுத்தினார். அவர்களில் குஷ்டரோகியாக இருந்த சமாரியன் மாத்திரம் நன்றி சொல்ல வந்தான். அவனை இயேசு "அந்நியன்" என்றே குறிப்பிட்டுள்ளார் [லூக். 17:18]. இன்னும்,

யோவான் 4ம் அதிகாரத்தில், யாக்கோபின் கிணற்றருகே இயேசு ஒரு சமாரியப் பெண்ணிடம் தாகத்துக்குத் தா என்று கேட்டபோது, அவள் அவரை நோக்கி; *நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்* [யோவான் 4:9] நிலைமை அந்தளவுக்கு மோசமாக இருந்தது.

இப்படியெல்லாம் நிலைமை போனதற்கான காரணம், சமாரியர்கள் பக்தி ரீதியாகத் தங்களை இழிவுபடுத்திக் கொண்டது தான். ஆன்ம காரியங்களில் நாம் நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக வைத்துக் கொள்வதற்கு, சமாரியர்கள் போன்று பக்தித் தவறுகள் செய்யா மலிருப்பது அவசியம். ஆகவே, சமாரியர்களின் மதத்திலிருந்து நாம் நமக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக்கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்.

## I பயனற்ற பயம் கொண்ட மதம்

சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து சமாரியர்கள் துடைத்தெறியப் பட்டு, மெய்பக்தியுடையவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டதற்கான முதலாவது காரணமாக, பக்தி ரீதியாக அவர்கள் கொண்டிருந்த பயனற்ற பயத்தைக் கூறலாம்.

ஆன்மீக உணர்வு கொண்ட ஒருவன் தேவகாரியங்களில் பயபக்தியுடையவனாக இருக்க வேண்டும். பயமில்லாத பயத்தினால் எப்படிப் பிரயோஜனம் இல்லையோ அதேபோல பக்தியில்லாத பயத்தினாலும் பிரயோஜனம் இல்லை. இந்த சமாரியர் மெய் பக்தி யில்லாத பயம் கொண்டவர்களாகவே இருந்துள்ளனர். எப்படியெனில், சமாரியவிலிருந்து அசீரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு. ராஜ கட்டளையின்படி மீண்டும் சமாரியாவுக்குக் கொண்டு வரப்பட்ட ஆசாரியன் பெத்தேலில் தங்கியிருந்து, கர்த்தருக்குப் பயந்து நடக்க வேண்டிய விதத்தை அவர்களுக்குப் போதித்தான் [II ராஜா. 17:28]. ஒரு கட்டத்தில் கர்த்தருக்கப் பயப்படாமல், சிங்கங்களால் கொல்லப்படும் அபாயத்திலிருந்த சமாரியர்கள், கர்த்தருக்குப் பயப்பட ஆரம்பித்தார்கள். ஆனால், அந்த பயம் பக்தி ரீதியாக அவர்களுக்கு எவ்விதத்திலும் பயன் தரவில்லை. எப்படியெனில், *அவர்கள் கர்த்தருக்குப் பயந்ததுமன்றி, மேடைகளிலுள்ள கோவில்களில் தங்களுக்காக ஆராதனை செய்கிறதற்கு, தங்களுக்குள் ஈனமானவர்களை ஆசாரியர் களாகவும் ஏற்படுத்தினார்கள்* [II ராஜா. 17:33]. சமாரியர்களின் கர்த்தருக்கான பயம் எந்த லட்சணத்தில் இருந்துள்ளது பாருங்கள்!

ஆன்ம காரியங்களில், சமாரியர் போன்று பயனற்ற பயம் கொள்வதில் எந்த நன்மையும் கிடையாது. சமாரியாவில் எஞ்சி இருந்த வர்களும், சமாரியாவுக்குப் புதிதாக வந்தவர்களும் யெகோவாவுக்குப் பயந்து, பெத்தேலில் இருந்த ஆசாரியன் போதித்தபடி நடந்து கொண்டார்கள். அதுவரைக்கும் சரிதான். ஆனால், அந்த பயமானது அவர்கள் கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி வழிநடத்த வில்லை. சமாரியர்கள் கொண்டிருந்த பயம் புதிய ஏற்பாட்டில் ஆளுநர் பேலிக்ஸ்ஸ நமக்கு நினைவுபடுத்துகிறது. அப்போஸ்தலன் பவுல், *நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத்தீர்ப்பையும்*

*குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் என்றான்* [அப். 24:25]. பேலிக்ஸ் பயப்பட்டான். ஆனால், அந்த பயம் அவனைக் கீழ்ப்படிதலுக்கு வழிநடத்தவில்லை. கீழ்ப்படிதல் இல்லாத பயத்தால் எவ்வித பயனும் இல்லை.

அப்படியானால், அன்பானவர்களே, பக்திக் காரியங்களில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்து கொண்டுள்ளோம்? தேவனுக்கான நம்முடைய பயம் எப்படியுள்ளது? சமாரியர் போன்ற பயத்தைக் கொண்டு நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்துகிறோமா? அல்லது ஞானி சாலமோன் கூறுவது போல், தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும் பக்தி வாழ்க்கையை மேற்கொள்ளுகிறோமா? [பிர. 12:13] சிந்திப்போம்.

சிலுவைக்குப் பின்னால் வாழும் நமக்கு, நாம் அறிந்து கொள்ளும்படியாகவும், கீழ்ப்படியும்படியாகவும் அநேக உபதேசங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவதற்கும், தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பதற்கும், ஒரு தேர்ந்த பக்தி வாழ்வு வாழ்வதற்கும், மறுமையில் பேரானந்த பாக்கியம் பெறுவதற்கும் தேவையான எல்லா உபதேசங்களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகள் ஒவ்வொன்றுக்கும் நாம் நம்மைக் கீழ்ப்படுத்தாத வாழ்க்கை வாழ்கிறவர்களாக இருந்தால், நாம் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, சமாரியர்களின் மதத்தைப் பின்பற்றுகிறவர்களாகவே இருப்போம். நாம் சமாரியர்களின் மதத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தால், ஜீவ புத்தகத்தில் நம்முடைய பெயர் இடம் பெறாமலும், ஒருவேளை ஏற்கனவே இடம் பெற்றிருந்தாலும் கிறுக்கிப் போடவும் படும். எச்சரிக்கையாயிருப்போம்.

## II முறைமைகளை மாத்திரம் கைக்கொண்ட மதம்

சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து சமாரியர்கள் துடைத்தெறியப்பட்டு, மெய்பக்தியுடையவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டதற்கான இரண்டாவது காரணமாக, பக்தி முறைமைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்ததைக் கூறலாம்.

பரலோகத்தின் தேவனைப் பிரியப்படுத்த நினைக்கும் ஒவ்வொருவரும் அப்படிப் பிரியப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதிலும், எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதிலும் தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட தெளிவு இந்த சமாரியர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. வேத வாக்கியம் அவர்களின் பக்தி நிலை குறித்து எங்ஙனம் எடுத்துரைக்கிறதென்று கவனியுங்கள். *அப்படியே கர்த்தருக்குப் பயந்தும், தாங்கள் விட்டு வந்த ஜாதிகளுடைய முறைமையின் படியே தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள். இந்நாள் வரைக்கும் அவர்கள் தங்கள் முந்தின முறைமைகளின்படியே செய்து வருகிறார்கள்; அவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறதுமில்லை, தங்கள் சுய திட்டங்கள் முறைமைகளின்படியாகிலும், கர்த்தர் இஸ்ரவேல் என்று பேரிட்ட யாக்கோபின் புத்திரருக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் ஒத்தபடியாகிலும் செய்கிறதுமில்லை* [2 ராஜா 17:33, 34].

ஆம், சமாரியர்கள் கர்த்தருக்குப் பயந்தார்கள் என்று முன்பகுதி சொல்கிறது. ஆனால், தேவன் விதித்த பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய முக்கியத்துவம் தராமல், முறைமைகளுக்கு, அதாவது சடங்கு சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இது எதைக் காட்டுகிறது? கர்த்தருக்காகச் செய்யப்படும் காரியங்களில் இவர்கள் இருதயம் சம்பந்தப்படுவதில்லையென்பதைத்தானே காட்டுகிறது. இருதயம் சம்பந்தப்படாத ஒன்றை தேவன் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் இருதயத்தைக் காண்கிறவராக உள்ளார் [1 சாமு, 16:17]. மாறுபாடான இருதயத்தைக் கர்த்தர் வெறுத்து ஒதுக்குகிறார் [சங். 101:3,4].

நம்முடைய இரட்சகர் இயேசு இப்பூமியில் இருந்த நாட்களில், இருதயத்தில் உண்மையில்லாமல், பக்தி வேடம் போட்டுத் திரிந்த வேத பாரகர்களையும், பரிசேயர்களையும் தடித்த வார்த்தைகளால் தாக்கியுள்ளார். *உங்கள் பராம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள். மாயக்காரரே, உங்களைக் குறித்து; இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்* என்றார் [மத். 15:6,9]. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த இந்த யூதர்கள், சமாரியர்கள் போன்று பாரம்பரியம், சடங்கு, சம்பிரதாயம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆனால், இருதயம் தேவனை விட்டு விலகியிருந்தது. பாரம்பரியமும், சடங்கும், சம்பிரதாயமும் போதுமென்று இயேசு இவர்களில் பிரியப்பட்டாரா? அல்லது இவர்களின் இருதயநிலை கண்டு துக்கப்பட்டாரா?

சரி, அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? சமாரியர்கள் போலும், வேதபாரகர், பரிசேயர் போலும், முறைமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? அல்லது இருதய நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? ஒருவேளை இருதய நிலை தான் முக்கியம் என்பது நமது பதிலாக இருக்குமானால், ஒரு காரியத்தைத் துவக்குவதற்கு ஏன் இன்னும் "நல்ல நேரம்" பார்க்கிறோம்? பிள்ளைகளுக்கு மணம் முடிப்பதற்கு ஏன் இன்னும் "முகூர்த்த நாள்" தேடுகிறோம்? திருமண அழைப்பிதழ்களில் ஏன் இன்னும் "மஞ்சள்" பூசுகிறோம்? புது வீடு கட்டும்போது ஏன் இன்னும் "சம்பிராதயங்களுக்கு" முக்கியத்துவம் கொடுக்கிறோம்? ஆராதனை வேளைகளில் இன்னும் ஏன் "மணியடித்து" தூபம் காட்டுகிறோம்? பாரம்பரியமான காரியங்களை ஏன் விடாமல் "தொங்கிக்" கொண்டிருக்கிறோம்? இன்னும், வேதத்தில் சொல்லப்படாத அநேக காரியங்களுக்கு முக்கியத்துவம் தந்து தேவ பிரமாணங்களை ஏன் அவமாக்கிக் கொண்டுள்ளோம்? சமாரியர்களின் மதத்திற்கும், பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கைக்கும் பெரிய வேறுபாடு இல்லாமல் இருக்கிறதே இது எப்படி நியாயமாகும்? தேவன் இதில் எப்படிப் பிரியப்படுவார்?

ஆகையால், சடங்கு, சம்பிரதாயங்கள், பாரம்பரியம் போன்றவை களைக் கொண்ட முறைமைகளுக்கு விடை கொடுத்துவிட்டு, முழு மனதோடு தேவனை இருதயத்திலிருந்து பின்பற்றி ஜீவ புத்தகத்தில் நம்முடைய பெயர் இடம் பெறவும், கிறுக்கிப் போடப்படாமலிருக்கவும் பார்த்துக் கொள்வோம்.

## III சமரச மனப்பான்மை கொண்ட மதம்

சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து சமாரியர்கள் துடைத்தெறியப் பட்டு, மெய்பக்தியுடையவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டதற்கான இன்னுமொரு காரணமாக, அவர்கள் கொண்டிருந்த சமரச மனப் பான்மையைக் கூறலாம்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இந்த சமரச மனப்பான்மை ஒரு பெரும் போக்காகத் தோன்றும். பரவாயில்லையே, எல்லோரையும் அனுசரித்துப் போகிறார் என்று கூட எண்ண வைக்கும். உலகப் பிரகாரமான காரியங்களில் இது கெட்டிக்காரத்தனமாகக் கூட கருதப்படும். ஆனால், ஆன்மீக காரியங்களில் நிலைமை தலைகீழ். ஆம், துன்மார்க்கரோடும், பாவிகளோடும், பரியாசக்காரரோடும், தேவ பக்தியுள்ளவன் சமரசம் செய்யக் கூடாது என்று சங்கீதம் 1:1,2 வசனங்களில் பார்க்கிறோம். தீமையோடு சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்று பவுல் ரோமா புரியாருக்கு எழுதும்போது குறிப்பிடுகிறார் [ரோமர் 12:9]. இன்னும், பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும்போது அவிசுவாசிகளுடன் சமரசம் கூடவே கூடாது என்று அழுத்திக் கூறுகிறார். *அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக, நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனு டைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?......* [II கொரி. 6:14,16] என்று அடுக்கடுக்காகக் கூறுகிறார்.


இதுமாத்திரமல்ல, கள்ளப்போதகர்களோடும் சமரசம் கூடாது என்று கடுமையாகவே கூறுகிறார். *கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க் கிரியைகளுக்குப் பங்குள்ளவனாகிறான்* [II யோவான் 8,10] இந்த வசனங்களெல்லாம் தேவன் அவருக்கடுத்த காரியங்களில் சமரச மனப்பான்மையை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லையென்பதையே காட்டுகிறது. ஆனால், சமாரியர்கள் என்ன செய்தார்கள்? கவனியுங்கள். அப்படியே அந்த ஜாதிகள் கர்த்தருக்குப் பயந்தும், தங்கள் விக்கிரகங் களைச் சேவித்தும் வந்தார்கள் [II ராஜா 17:41]. உலகில் இப்படியும் ஒரு மதம் இருந்துள்ளது. இவர்கள் யாரைப் பிரியப்படுத்த பக்தி வேடம் பூண்டார்கள் என்றே தெரியவில்லை.

பரலோகத்தின் தேவனும், இயேசு ஆண்டவரும் தன் மீது கொண்டுள்ள பத்தியை ஒருவன் பங்கு போட்டுக் கொள்ள ஒருபோதும் அனுமதிப்பதில்லை. தன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு தேவன் ஆரம்பத்திலேயே என்ன சொல்லியுள்ளார் என்று பாருங்கள். *இஸ்ரவேலே கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக. [உபாக. 6:4,5]. மேலும், இயேசு தம்முடைய சீடர்களை நோக்கி; ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் என்று கூறியுள்ளார்* [மத். 16:24].

அன்பானவர்களே, உண்மை நிலை இப்படியிருக்கும்போது, சமரச மனப்பான்மையைப் பொறுத்தளவில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்து கொண்டுள்ளோம்? “ஒன்று” என்பதற்கு மாற்றாக நாம் வேறொன்றை ஏற்றுக்கொள்வோமானால், நாமும் சமரசவாதிகளாகவே இருப்போம். அப்போஸ்தலன் பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில், “ஏழு ஒன்றுகளை” க்குறிப்பிடுகிறார். *உங்களுக்குண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்* [எபே. 4:4] என்று. இந்த ஒன்றுகள் தான் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை. இவைகளுக்கான மாற்றை தேவன் அங்கீகரிக்கமாட்டார். இந்த உண்மையைப் புரிந்து, இந்த ஒன்று களுக்கான சரியான பொருள் என்னவென்பதைக் கண்டு அதை உறுதியாய் பற்றிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரே சரீரம் என்றுள்ளது [4:4]. தொடர்ந்து கீழே படித்தால், சரீரம் என்பது சபை என்று தெரிந்து கொள்ள முடியும் [4:12]. ஒரே சரீரம் என்பது ஒரே சபை. ஆனால், உலகில் இன்று ஏராளமான சபைகள் உள்ளன. இவைகளெல்லாம், கிறிஸ்துவின் சரீரமாகிய அந்த ஒரு சபைக்கு மாற்றாக மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவை. அன்றைக்கு சமாரியர்களின் மதத்தை, அவர்களின் நீதியற்ற பக்திக் காரியங்களை வெறுத்த தேவன், நம்முடைய அநீதியான காரியங்களை மாத்திரம் ஏற்றுக்கொள்வாரா? அப்படி ஏற்றுக்கொள்வார் என்று நாம் எதை வைத்து நம்புகிறோம்? சபை என்பது ஒன்றுதான். அந்த சபை தேவனால் திட்டமிடப்பட்டு [எபே. 3:10]. இயேசுவால் வாக்களிக்கப்பட்டு [மத். 16:18] அப்போஸ்தலர்களால் பெந்தெகாஸ்தே நாளில் ஆரம்பிக்கப் பட்டது [அப். 2 ம் அதி.] இந்த எளிய உண்மைக்கு எதிராக நம்முடைய பக்திச் செயல்பாடு இருக்குமானால். நாமும் சமரச மனப்பான்மை கொண்ட சமாரியர்கள் போல் தான் தேவனுடைய பார்வையில் காணப்படுவோம்.

ஆகையால், நாம் எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய பக்திக் காரியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, சமாரியர்களின் பெயர் சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து அழிக்கப்பட்டதுபோல, நம்முடைய பெயர் ஜீவ புத்தகத்திலிருந்து அழிக்கப்படாமல் பார்த்துக்கொள்வோம். ஆமென்!!



# ஏன் அஸ்திபாரம் மிக முக்கியமானதாக இருக்கிறது

**J.C. சோட்**

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, இவ்வுலகத்தில் ஒரு வீட்டையோ அல்லது அடுக்குமாடி வீடுகளையோ அல்லது நீண்ட நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கும் ஏதாவது ஒன்றையோ கட்டுவதற்கு சரியான அஸ்திபாரம் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. நாம் நம்முடைய வேலையிலோ அல்லது ஒரு தொழிலிலோ வெற்றிபெற வேண்டுமென்றால், அதற்காக போதுமான கல்வி மற்றும் பயிற்சி பெற்று நம்மை ஆயத்தமாக்கி வைத்திருக்க வேண்டுவது அவசியம் என்ற உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். நாம் இந்த அஸ்திபாரத்தின் முக்கியத்துவத்தையோ அல்லது எதிர் காலத்திற்கு ஆயத்தப்படுவதையோ அசட்டை செய்தால், நாம் மோசமான காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்படும்.

நம்முடைய கர்த்தர் ஒரு நல்ல ஆவிக்குரிய அஸ்திபாரத்திற்கான அவசியத்தை இரண்டு வகையான கட்டிடம் கட்டுபவர்களை உதாரணமாகச் சொல்லி விளக்கியுள்ளார். ஒருவன் கன்மலையின் மேல் வீட்டைக் கட்டினவன். இன்னொருவன் மணலின் மேல் வீட்டைக் கட்டினவன். இவர்களைப் பற்றி இயேசு என்ன சொன்னார் என்பதைக் கவனியுங்கள். *"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்"* [மத். 7:2427].

சற்று முன்பு நாம் பார்த்த உதாரணத்தில், இயேசு அந்தக் கட்டிடம் கட்டுபவர்களில் யார் புத்தியுள்ளவன், யார் புத்தியற்றவன் என்று வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி கட்டுகிறவன் புத்தியுள்ளவன் என்று காட்டுகிறார். அவன் கிறிஸ்துவின் மீது கட்டுகிறபடியால் புத்தியுள்ள மனிதன் என்று சொல்கிறார். இந்த மனிதன் பழக்க வழக்கங்களையும், பாரம்பரியத்தையும்,

மனுஷருடைய போதனைகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, கிறிஸ்துவின் போதனைகளின் மீது தன் வீட்டைக் காட்டுகிறான். அதன் விளைவாக, இந்த மனுஷன் உறுதியான அஸ்திபாரத்தில் இருக்கிறான். இவனிடம் சத்தியம் இருக்கிறது, இவனிடம் கிறிஸ்து இருக்கிறார். இவன் ஒரு கிறிஸ்தவன். இவன் கர்த்தருடைய சபையின் உறுப்பினர். இந்த மனுஷனை எதுவும் அசைக்க முடியாது. இவன் பற்றிக் கொள்ளும்படியான ஒன்று இருக்கிறது. இவனுக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டு.

இயேசு பேசுகிற மற்றொரு மனிதன் புத்தியற்றவன். இவனும் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்கிறான். ஆனால், அவைகளுக்கு கீழ்ப்படியத் தவறுகிறான். ஒருவேளை அவைகளை அவன் நம்பாமல் இருந்திருக்கலாம். இன்னும் காலம் இருக்கிறது என்று நினைத்திருக்கலாம். அவன் தன்னை நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது மனுஷருடைய உபதேசங்களுக்கு பின்னாகச் சென்றிருக்கலாம். பிரச்சினை என்னவாக இருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்டது உண்மையாயிருக்கிறபடியால், அவன் கடைசியாக எதன்மீது கட்டுகிறானோ அது அவனுக்கு நன்மையாக இருக்காது. அவன் இழந்துபோன நிலையில் இருக்கிறான், நித்திய காலத்திற்கும் இழந்து போவான்.

அநேக வருடங்களுக்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசி, கர்த்தர் அஸ்திபார மாகிய ஒரு கல்லை சீயோனிலே வைப்பது குறித்துப் பேசியிருக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து தான். அது எருசலேமில் வைக்கப்படும். அப்போது ஏசாயா உரைத்த அந்த தீர்க்கதரிசனத்தை நாம் வாசிப்போம். "*ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும் திட அஸ்திபார முள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான் என்று கூறியுள்ளார்* " [ஏசாயா 28:16]. இந்த அஸ்திபாரத்தின் விவரிப்பைக் கவனியுங்கள். அது ஒரு கல்லாயிருக்கும், அது பரீட்சிக் கப்பட்ட ஒன்றாயிருக்கும், அது விலையேறப்பெற்றதாயிருக்கும், அது திட அஸ்திபாரமுள்ள மூலைக் கல்லாயிருக்கும். இந்த விவரிப்பு, பதங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதை புதிய ஏற்பாட்டில் நாம் பின்னர் பார்க்கலாம். சங்கீதக்காரனாகிய தாவீதும் இந்த அஸ்திபாரம் பற்றி சங்கீதம் 118:22,23 வசனங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார், "*வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக் கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரிமாயிருக்கிறது* ". புதிய ஏற்பாட்டில் இது கிறிஸ்துவில் நிறைவேறியதை நாம் காண முடியும்.

இயேசுவின் நாட்களுக்கு நாம் திரும்பும்போது, இப்படி வாசிக்கிறோம். " *இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?* " [மத். 21:42]. இயேசு இவ்விதமாகச் சொன்னார், " *வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற*

*வேத வாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின் மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்".* ஒரு கல் அல்லது பாறை அஸ்திபாரம் போடுவதற்காக பயன்படுத்தப்படும், ஆனால், ஒருவர் அதன்மீது இடறி விழுந்தாலோ அல்லது அது அவன்மீது விழுந்தாலோ அந்தக்கல் அந்த நபரை அழித்து விடும். வேறுவிதமாகச் சொன்னால், சரியாக பயன் படுத்தினால் அது ஆசீர்வாதமாக இருக்கும்; ஆனால், அது அசட்டை பண்ணப்பட்டால் அல்லது தவறாக பயன்படுத்தப்பட்டால் அது அழிக்கும் சக்தியாக மாறிவிடும். இது ஆவிக்குரிய கன்மலையாயிருக்கிற கிறிஸ்துவின் காரியத்தில் உண்மையாய் இருக்கிறது.

அப்போஸ்தலருடைய புத்தகத்திற்குத் திரும்பும் போது, பேதுரு, குணமாக்கப்பட்ட ஒரு மனிதனைப் பற்றி பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகரிடம் இப்படிச் சொன்னார். " *உங்களால் சிலுவையில் அறையப் பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்"* [அப். 4:1012]. பவுல் இஸ்ரவேலர்கள் அல்லது யூதர்களைப் பற்றி இப்படிச் சொல்கிறார். " *நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை, என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று"* [ரோமர் 9:3133]. இங்கே பவுல் ஏசாயா 28:16ஐ மேற்கோள் காட்டித்தான் பேசுகிறார்.

இங்கே, இந்தக் கன்மலை அல்லது அஸ்திபாரம் யார்? *'போடப் பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது'* [I கொரி. 3:11]. இன்னும் I கொரி. 10:3,4 வசனங்களில், மோசேயின் நாட்களில் இஸ்ரவேலர்கள் பற்றி பவுல் இப்படிச் சொல்கிறார், "*எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்று*". அதைப் போலவே, எபேசு கிறிஸ்தவர்களிடம் பேசும்போது, "*ஆகையால் இனி நீங்கள் அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும்*

*இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்"* [எபே. 2:19-22] என்று கூறியுள்ளார். இங்கே அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய வீட்டார் அல்லது தேவனுடைய குடும்பமாயிருக்கிற கிறிஸ்தவர்கள் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். இங்கே தேவனுடைய வீட்டார் அல்லது சபையார் எப்படி அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் உபதேசங் களின் மீது கட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்கு கிறிஸ்து மூலைக்கல்லாயிருக்கிறார் என்பதையும் விளக்குகிறார். இங்கே பொதுவான அஸ்திபாரம் மாத்திரம் முக்கியமானதாயிராமல், மூலைக் கல்லும் முக்கியமானதாக உள்ளது. அஸ்திபாரத்தின் மிக முக்கியமான பகுதி இந்த மூலைக்கல்தான். அஸ்திபாரமில்லாமல் எந்த ஒரு வீடும் நிலை நிற்காது. மறுபடியும் பவுல் சொல்லும் போது, *"தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனு டைய சபையாய் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது "* [I தீமோ. 3:15]. கிறிஸ்து அஸ்திபாரமாகவும், மூலைக் கல்லாகவும் இருந்து தேவனுடைய வீடு அல்லது சபை அதன்மீது கட்டப்படும் போது, சபை சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது. அதாவது, சபை உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறபடியால், சபை சத்தியத்தை பிடித்துக் கொள்ளும் நிலையிலும், இழந்துபோன உலகத்திற்கு சத்தியத்தை பிரசங்கிக்கும் நிலையிலும் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடம், *'இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், வஞ்சகங் களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு, நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையா யிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள், அந்தப்படியே; இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றது மாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக்கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகி றார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்"* [Iபேதுரு 2:18].

மறுபடியுமாக, இங்கே இந்த எழுத்தாளர் எப்படி கிறிஸ்து, ஏசாயா 28:16 தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறார் என்பதையும், கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாயிருக்கிறார் என்பதையும் குறிப்பிடு கிறார். யூதர்கள் தள்ளின அந்தக்கல் அஸ்திபாரமாக மாறினதோடு, அஸ்திபாரத்தின் மிக முக்கியமான பகுதியாகிய பிரதான மூலைக் கல்லாகவும் மாறி விட்டது. இங்கே, பேதுரு கிறிஸ்துவை ஒருவன் ஏற்றுக் கொள்ளும்போது எப்படி அவன் ஆசீர்வாதமுள்ளவனாகவும், அவரை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளும்போது எப்படி இழந்து போனவர் களாகவும் இருப்பார்கள் என்று காட்டுகிறார்.

மத்தேயு 16:13-19 வசனங்களில், கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் இந்த உலகம் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறது என்று கேட்டார். அப்போது அப்போஸ்தலர்கள், உம்மை சிலர் ஒரு தீர்க்கதரிசி என்றும், சிலர் உம்மை வேறொரு தீர்க்கதரிசி என்றும் நினைக்கிறார்கள் என்று பதிலளித்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட பதிலை அங்கே கிறிஸ்து எதிர்பார்க்கவில்லை. தம்மீது அவர்கள் கொண்டிருந்த இப்படிப்பட்ட விசுவாசத்தின் மீது, இயேசுவால் தம்முடைய சபையை கட்டவில்லை. பின்பு, இயேசு அப்போஸ்தலர்களிடம் திரும்பி, அவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டார். அப்பொழுது அவர்கள், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதாகச் சொன்னார்கள். அங்கே, தன்னை தேவனுடைய குமாரன் என்று அவர்கள் செய்த அறிக்கையின் மீது தம்முடைய சபையைக் கட்டுவதாகக் கர்த்தர் பதிலளித்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத் தில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித் தார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார். ஆனால், சபையை அவர் எதன் மீது கட்டினார்? தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கின்ற உண்மையின் மீது இயேசு தம்முடைய சபையைக் கட்டினார். அது மாத்திரமல்ல, சபை இந்நாள்வரை இந்த உண்மையின் மீதுதான் இருக்கிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்படா திருந்தால் சபை விழுந்துபோயிருக்கும் அல்லது எப்பொழுதோ இல்லாமல் போயிருக்கும். ஆனால், சபை இன்னும் நிலைத்திருக் கிறது, கிறிஸ்து தேவனுடைய குமாரன், கன்மலை, பிரதான மூலைக் கல் என்கின்ற உண்மைகளை அடிப்படையாக வைத்துத்தான் சபை இன்னும் நிலைத்திருக்கிறது. பவுல் சொன்னது போல், அவர் ஓர் உறுதியான அஸ்திபாரம் தான்.

என் நண்பர்களே, எதன் மீது நீங்கள் கட்டிக் கொண்டிருக் கிறீர்கள்? அவர் சொல்லிய வார்த்தையைக் கேட்டு அவைகளின்படி செய்தால் நீங்கள் கிறிஸ்துவின் மீது கட்ட முடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து, கிறிஸ்துவின் மீது கட்டப்பட்ட தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். நீங்கள் ஒரு புத்தியுள்ள நபராக இருந்தால் இதைச் செய்வீர்கள். நீங்கள் அப்படிச் செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம். ❋

பெண்கள் பகுதி

# "உங்கள் வழிகள் என் வழிகள் அல்ல"

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே, குடும்பத்தின் தலைவிகள் என்ற ஸ்தானத்தில் இருக்கும் நாம் பல காரியங்களை போட்டுக் குழம்பிக் கொண்டும், குழப்பிக் கொண்டும் எப்போதும் ஒரு தெளிவற்ற நிலையில் இருப்பது வழக்கமாகிக் கொண்டு வருகிறது. தேவன் என்ன சொல்கிறார், அவர் சித்தம் எப்படி என்று நினைப்பதற்கு மனதில் இடம் கொடாமல் அநேக காரியங்களுக்காக கவலைப்பட்டு கிடக்கிறோம். வழக்கம் போல் இவைகளுக்கெல்லாம் தீர்வு காண வேதாகமத்திற்குள் தான் செல்ல வேண்டியுள்ளது.

ஏசாயா 55:8,11 வசனப் பகுதிகளில் இருக்கும் காரியங்களை வாசித்துப் பாருங்கள். என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்கிறார்.

"பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது". நாம் நினைப்பது போல் தேவன் நினைப்பது இல்லை. தேவனுடைய வார்த்தைகள் நம் மனதிற்குள் கொண்டு செல்லுவதை கற்றுக் கொள்ளும்போது நாம் அவரைப் போல் நினைக்க ஆரம்பித்து விடுவோம். சங். 139: 1,6 மற்றும் நீதி. 5:21ல் பார்க்கிறபடி, தேவன் எல்லாக் காரியங்களையும் அறிந்தவராயிருக்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று ஆதி. 17:1ல் வாசிக்கிறோம். அவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று சங். 139:7, எரேமியா 23:23,24 வசனங்களில் பார்க்கிறோம்.

தேவனுடைய வழிகள் நம் வழிகளைக் காட்டிலும் வேறுபட்டவை. 100 வயது மனிதனுக்கும், 90 வயது ஸ்திரீக்கும் ஈசாக்கு என்ற குழந்தை [ஆதி. 17:17], ஒரு கன்னிகை தேவ மைந்தனை பெற்றெடுப்பது [லூக். 1:35]. ஒரு குறிப்பிட்ட நதியிலே ஏழு முறை முழுகும் போது குஷ்டரோகம் சுகமானது [2 இராஜா. 5:9,13], மீண்டும் பிறப்பதற்கு [ஞானஸ்நானம்] தண்ணீரில் மூழ்குவது [ரோமர் 6:4], போன்ற காரியங்கள் எல்லாம் நம்முடைய அறிவுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. இவை இயற்கையான காரியங்களுக்கு மாறுபட்டவையும், இது எப்படி என்ற கேள்வியையும் எழுப்புகிறது. ஆனால், தேவனுடைய வழி இப்படித்தான் என்றுள்ளது. அதை நாம் அப்படியே விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

என்றென்றும் அழியாத இராஜ்ஜியம் ஒன்றை தேவன் ஏற்படுத்துவார் என்று தானி. 2:44ல் வாசிக்கிறோம். மேலும், வரப் போகிற மேசியாவைப் பற்றி

காரியங்களை வெளிப்படுத்தும்படி தானியேலை பயன்படுத்துகிறார் தேவன். சகல அதிகாரமும், மகிமையும் கொண்டவர். சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிப்பார்கள். கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம். அவருடைய ராஜ்ஜியம் அழியாதது. [தானி. 7:13,14]. ஆனால், யூதர்களின் நினைப்பு பூமிக்குரிய ராஜ்ஜியத்தை ஏற்படுத்தப்போகிறார் என்று நம்பினார்கள். சீஷர்களே அப்படித் தான் எண்ணினார்கள் [அப். 1:6,7].

மேலும், இயேசுவின் பிறப்பைக் குறித்து பார்க்கும்போது, அவர் அரண்மனையில் தான் பிறப்பார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், இரட்சகர் முன்னணையில் பிறந்தார் [லூக். 2:7]. இரட்சகர் எங்கு வளர்க்கப்படுவார் என்பது யூதர்களின் கேள்வி? சிறிய ஊராகிய நாசரேத்தில் [லூக். 2:39] வளர்க்கப் பட்டார். இரட்சகர் தச்சுத் தொழில் செய்யும் ஒருவரா என்று வியந்தார்கள். ஆனால், இரட்சகர் தச்சுத் தொழில் செய்தார் [மாற்கு 6:33]. இந்த இராஜா எருசலேமுக்குள் எப்படி வருவார்? என்று எதிர்பார்த்தார்கள். இரட்சகரும், மகிமையின் இராஜாவுமாகிய அவர் ஒரு கழுதையின் மேல் எருசலேமுக்கு வந்தார் [மத். 21:11]. இவைகளையெல்லாம் பார்க்கும்போது மனிதனின் எதிர்பார்ப்பு ஒன்றாக இருக்கிறது. தேவனின் செயல்பாடு வேறாக இருக்கிறது. அது மிகவும் எளிமையானது. ஆனால், உன்னத நோக்கம் கொண்டது. ஆனால், எளிமையானதை ஏற்றுக்கொள்ள நம்மால் முடிவதில்லை.

மேலும், 1கொரி. 1:18-31 வசனங்களில், குறிப்பாக 18ல் இயேசுவைப் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. மற்றவர்களுக்காக தியாகம் செய்வதை இளக்காரமாக கருதும் மனுக்குலம் இயேசுவின் சிலுவைப்பாடு, மரணம் இவற்றை பயித்தியகாரத்தனமாக நினைக்கிறது. ஆனால், தேவனுக்கோ இது இரட்சிப்புக்கு தேவ பெலனாயிருக்கிறது. இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கியிருக்கிறார். நாம் வேண்டுமானால் நினைக்கலாம் எனக்கு புரிந்துவிட்டது, எனக்கு தெரியும், என்னைப்போல் அறிவாளி யாருமில்லையென்று. தேவனுடைய வழிகளின்படி நாம் காரியங்களைச் செய்யாதிருப்போமானால் நம்முடைய புத்தி, ஞானம், இவைகளெல்லாம் ஒன்றுமில்லை. 25ம் வசனம் இங்கு முக்கியமான வசனம். ஏன் இப்படி என்று நமக்கு புரியாவிட்டாலும் தேவனுடைய வழியை நாம் நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்து, ஆராதனைகளில் இன்று பார்க்கும்போது பெண்கள் எல்லோரும் பார்க்கும்படியாக முன்பாக அமர்ந்து, பிரசங்கிப்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், வேதாகமம் சொல்கிறது, உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை என்று [1 தீமோ. 2:12]. இன்னும் சொல்லப் போனால், சபையில் பெண்கள் அமைதலாயிருக்க வேண்டும் என்று தான் தேவன் சொல்கிறார் [1கொரி. 14:34]. எரேமியா தீர்க்கன் சொல்லும்போது, "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே

ஆகிறதல்லவென்றும் அறிவேன் [எரே. 10:23] என்றும் கூறுகிறார். கர்த்தருடைய வழிகள் செம்மை யானவைகள். நீதிமான்கள் அவை களில் நடப்பார்கள் பாதகரோவென் றால் அவைகளில் இடறி விழுவார்கள் [ஓசியா 14:9].

பிரியமான சகோதரிகளே! தேவனுடைய வழிகள் என்ன வென்று வேதம் சொல்லுகிறது. அதைத்தான் நாம் தொடர வேண்டும். நமக்கு விருப்பமானது, சுலபமானது, இலாபமானது என்று செய்யக் கூடாது. [யோ. 8:47] மற்றும் [1 யோ. 4:6] ஆகிய இடங் களில் தேவனால் உண்டானவர் கள் எங்களுக்கு செவி கொடுக்கி றார்கள். தேவனால் உண்டாயிராத வர்கள் எங்களுக்கு செவி கொடுக் கிறதில்லை என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

தேவனுக்கு செவி கொடுப்ப தென்பது அவர் வார்த்தைகளுக் குக் கீழ்ப்படிவது. தேவனுடைய வழிகள் என்னவென்று வேதா கமம் திட்டமாகக் கூறுகிறது. அவருடைய வழிகள் எல்லாம் உயர்ந்த வழிகள். உயர்ந்தது என்றால் பரத்துக்கடுத்தவைகள். உண்மையாலுமே நாம் பரலோகம் செல்ல வேண்டுமென்று தீர்மா னித்து விட்டால் அவருடைய வழிகளை நம் வழிகளாக்குவோம். ஆக, நம் விருப்பப்படி காரியங்கள் நடக்கவில்லையே என்று குழம்ப வேண்டாம். அவர் சித்தம் ஏற்றுக் கொள்வோம். தேவன் அதில் மிகவும் பிரியப்படுவார். சகலத்தை யும் நன்மைக்கு ஏதுவாக நடத்து வார். [ரோமர் 8:28]. இவைகளை படிப்பதோடு விட்டு விடாமல், சிந்திப்போம், தியானிப்போம். தெளிவு பெறுவோம். ஆமென்.

## எது மகிழ்ச்சி?

மகிழ்ச்சி என்பது நம்மிடம் இருப்பவைகளை அடிப்படையாக வைத்து அமைவதில்லை, மாறாக, நம்மிடம் இருப்பவைகளைக் குறித்து நாம் என்ன உணர்கி றோம் என்பதை அடிப்படையாக வைத்தே அமைகிறது.

கொஞ்சத்தினால் நாம் மகிழ்ச்சியாகவும் இருக்கலாம், அதிகத்தினால் நாம் துக்கமாகவும் இருக்கலாம். மகிழ்ச்சி என்பது பகிர்ந்து கொள்ளும் போது இரட்டிப்பாகிறது.

## என்னை மாற்றும்

கர்த்தாவே, என் சொல்லிலும், செயலிலும் மற்றவர் கள் உம்முடைய இரக்கத்தையும், அன்பையும் காணும் படி என்னை ஒளி வீசும் விளக்காக மாற்றும்.

வாலிபர் பகுதி

# காலேப்பிடமிருந்து கற்றுக் கொண்டவைகள்

Bro. பென்னிமார்ட்டின்

**வா**லிபர்களாகிய உங்கள் யாவரையும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்தி வரவேற்கிறேன். உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக மீண்டும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். வேதப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கதாப்பாத்திரமும் நமக்கு சுவாரஸ்யமான வைகளாகவும், அநேக பாடங்களை நமக்கு கற்றுத் தருபவைகளாகவும் இருக்கின்றன. அந்த வகையில் பார்க்கும்போது தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையினிடத்திலும் சரியான மனநிலையை அல்லது வேறே ஆவியை வெளிப்படுத்தின ஒரு கதாப்பாத்திரம் உண்டென்றால் அது தேவதாசனாகிய காலேப்பாகத்தான் இருக்க முடியும். இந்த காலேப்பின் தேவபக்தியுள்ள குணாதிசயங்களிலிருந்து நாம் அநேகப் பாடங்களை கற்றுக்கொள்ள முடியும் [ரோமர் 15:4].

## I *காலேப்பின் தைரியம்*

காலேப்பின் தைரியம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியை அவர் வேவு பார்த்துவிட்டுத் திரும்பும் போது முதலில் வெளிப்படுத்தப்பட்டது. ஜனக்கூட்டம் தேவனுடைய சித்தத்திற்கு எதிராக நின்றபோது அவர் தைரியமாக தேவனோடு நின்றார். கானான் தேசத்திற்கு வேவு பார்க்கச் சென்று வந்த பத்து வேவுகாரரை நாம் நினைவுப்படுத்திப் பார்க்கும் போது அவர்கள் துர்செய்தியைக் கொண்டு வந்தார்கள். மேலும், அவர்கள் "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்' என்றார்கள் [எண். 13:31]. ஆனால், காலேப் அதற்கு நேர் எதிராக சரியான மனநிலையுடன் "நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்" என்றார். பிரியமான வாலிபர்களே, நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யும் போது அதற்கு எதிராக சிலர் எழும்புவார்கள். அப்போது நாம் தனிமையாக விடப்பட்டாலும் கூட காலேப்பைப் போல வேறே ஆவியை அல்லது சரியான மனநிலையை வெளிப்படுத்தி மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு தேவனுக்காக நிற்கவேண்டும். நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் காலேப்பைப் போல வேறே ஆவியை உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் சத்தியத்திற்காக நிற்கும்போது உலகம் நம்மை சிநேகிக்காது, மாறாக, நம்மைப் பகைக்கும் [யோ. 15:19; யோ. 17:14]. இன்று அநேக வாலிபர்கள் சத்தியத்திற்காக நிற்கும் வாய்ப்பு வரும்போது உலகத்தை சிநேகித்து உலகத்தாரோடு நின்று விடுகிறார்கள். அப்படி

யென்றால் இந்த காலேப்பைப்போல் வேறொரு ஆவியை உடையவர் களாக இராமல் இவ்வுலகத்தாரைப் போலவே இருந்து விடுகிறார்கள். பிரியமானவர்களே, தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்ற நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் இவ்வுலகத்தின் மக்களிடமிருந்து வித்தியாசப்பட வேண்டும், அதற்காகவே நாம் தேவனால் அவர்களிட மிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்.

## II *காலேப்பின் அசைக்க முடியாத விசுவாசம்*

காலேப்பின் வாழ்க்கை வாலிபர்களாகிய நமக்கு கர்த்தருடைய வேலையைச் செய்வதற்கு கால அளவோ, வயது வரம்போ இல்லை, ஓய்வு என்கிற பேச்சுக்கே இடமில்லை என்று தான் காட்டுகிறது. அவர் எண்பத்தைந்து வயதுடையவராக இருந்தபோதிலும் தேவனுடைய ஜனங் களுக்கு வசமாகப் போகும் அந்த கானான் தேசத்தின் எல்லைகளில் நின்று "மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள் வரைக்கும் எனக்கு இருக்கிறது" [யோசு. 14:11] என்று சொன்னார். காலேப் தன்னுடைய அந்தியக் காலத்திலும் வேறே ஆவியை உடையவராக இருந்தார், அப்பொழுது கூட தேவனை முழுமையாகப் பின்பற்றும் ஆவியை உடையவராக இருந்தார். காலேப் தேவனால் தன்னிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பை தட்டிக் கழிக்க விரும்பவில்லை. நாற்பது வருடங்களாக அவர் தேவனோடு சேர்ந்து கானான் தேசத்திலிருந்த புற ஜாதியாரை விரட்டி யடிக்கும் அந்த நாளைக் குறித்து கனாக்கண்டார். காலேப் விசுவாசத்தில் அசையாதவராக இருந்து தேவனை முழுமையாகப் பின்பற்றினபடியால் தேவன் வாக்குத்தத்தம் பண்ணின அந்த கானான் தேசத்தை சுதந்தரித்தார். வாலிபர்களாகிய நமக்கு இந்த காலேப்பின் வாழ்க்கையி லிருந்து கிடைக்கும் பாடம் என்னவென்றால் அவர் தன்னுடைய வாலிப வயதில் தன்னோடிருந்த மக்கள் உலகத்தன்மை உடையவர் ளாக, தேவன் மீது விசுவாசமற்றவர்களாக இருந்திருந்தாலும், இவர் அவர்களிடமிருந்து வேறுபட்டு, தேவன் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவார் என்று அசைக்க முடியாத விசுவாசம் உடையவராக இருந்து முழுமையாக தேவனைப் பின்பற்றினபடியால் தான் அந்த கானான் தேசத்தை சுதந்தரிக்க முடிந்தது. அதுபோல நாமும் பரமக் கானானை நோக்கிய இந்த பயணத்தில் உலகத்தின் போக்கிற் கேற்ப சென்றுவிடாமல், சத்தியத்திற்காக, தேவனுக்காக நிற்கும் தருணம் கொடுக்கப்பட்டால் அதைச் சவாலாக ஏற்றுக்கொண்டு என்ன பாடுகள் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடினால் அந்தப் பரமக்கானானை நாம் சுகமாய் சென்றடையலாம். எனவே, உலகத்தி லிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மக்களாகிய நாம் தேவனுக்குப் பிரியமாக இருக்க வித்தியாசமான வாழ்க்கை முறையை வெளிப்படுத்தி வேறே ஆவியை உடையவர்களாக இவ்வுலகிற்கு காட்டுவோம். அதற்கு தேவன் தாமே உதவிச் செய்வாராக! ஆமென்.

சிறுவர் பகுதி

# சகேயுவிடமிருந்து..

Bro. ABEL R. NAYAGAM

சிறு பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் இவ்விதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாதந்தோறும் வெளிவரும் காரியங்கள் உங்களுக்கு பயனுள்ளதாகவே இருக்கிறது என நம்புகிறேன். சிறுபிள்ளைகளாகிய நாம் தேவனுக்கு மிகவும் பிரியமானவர்கள். இயேசு கிறிஸ்துவும் சிறுபிள்ளைகள் மீது மிகவும் அன்பாயிருந்தார். நம் மேல் அன்பாயிருக் கும் அவருக்கு நாம் கீழ்ப்படிதலோடும், ஆர்வத்தோடும் நம்முடைய அன்பை வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

சரி, இந்த மாதம் நாம் என்ன பாடம் கற்றுக்கொள்ளப் போகிறோம் தெரியுமா? இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாட்களில் அவரைப் பற்றி கேள்விப்பட்டு அவரைக் காண மிகவும் ஆர்வமாயிருந்த ஒரு மனிதனைப் பற்றி நாம் பார்க்க இருக்கிறோம். யார் இவர்?

சரி, வாசியுங்கள் லூக். 19:29. ஆம் சகேயுவைப் பற்றிய பாடம் தான். நீங்கள் உங்கள் ஞாயிறு பள்ளியில் அவரைப் பற்றி பாட்டுப் பாடியிருப்பீர்கள் அப்படித்தானே? சரி, சகேயுவிடமிருந்து இந்த மாதம் என்ன பாடம் கற்றுக் கொள்ளப் போகிறோம்? தொடர்ந்து படியுங்கள்.

## I இயேசுவைக் காண அவன் காட்டிய ஆர்வம்

3,4 வசனங்களை வாசியுங்கள். அங்கே அவன் இயேசுவைக் காண என்னென்ன முயற்சி செய்தான் என்று பாருங்கள். முதலில், வகை தேடினான். இரண்டாவது, குள்ளனானபடியினால் எல்லாருக்கும் முன்பாக ஓடினான். மூன்றாவது, ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். அடடா.. என்ன ஒரு ஆர்வம்.

எப்படியாவது பார்க்க வேண்டும் என்று வகை தேடினான். ஒரு வேளை தான் பார்க்க முடியாமல் போய் விடுமோ என்று நினைத்து பெரிய ஜனக்கூட்டத்திலிருந்து முன்னாக ஓடுகிறான். அதையும் மீறி தான் குள்ளனாயிருந்தபடியால் அதினாலே பார்க்க கூடாமல் போய் விடுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று நினைத்தானோ என்னவோ ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.

நாம் இவனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஆர்வம். இயேசுவைக் குறித்தும், அவருடைய காரியங்களைக் குறித்தும் நமக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறது? அவனுக்குத் தடையாக இருந்த காரியங்களை அவன் ஒரு தடையாக எண்ணாமல் முயற்சி செய்து இயேசுவை சந்தித்தான். குழந்தைகளே! நாமும் நம்முடைய வாழ்க்கையில் தடையாக வரும் காரியங்களை ஒரு காரணமாக

காட்டாமல், தடைகளை தள்ளி விட்டு தேவனைப் பிரியப்படுத்தி ஆர்வமாய் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் சகேயுவிற்கு எப்படி இயேசுவின் கண்களில் தயவு கிடைத்ததோ அதைப் போலவே நமக்கும் நம் தேவனுடைய கண்களில் தயவு கிடைக்கும்.

**II இயேசு கிறிஸ்துவை பற்றி கேள்விப் பட்டு, பார்த்ததோடு மட்டுமில்லாமல் கிரியைகளினாலே பிரியப்படுத்தினான்.**

6,8 வசனங்களை வாசியுங்கள். முதலில், அவன் சீக்கிரமாய் இறங்கி வருகிறான். இரண்டாவது சந்தோஷமாய் அழைத்துக் கொண்டு போனான். மூன்றாவது, ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்று சொன்னான்.

நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இரண்டாவது பாடம், இயேசுவை அறிந்து கொண்டதன் அடையாளமாய் அவன் கிரியைகளை காண்பித்தான். பிள்ளைகளாகிய நாமும் நம்முடைய கிரியைகளின் மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அவரைப் பற்றி அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அதை நம் செயலிலும் காட்ட வேண்டும்.

குழந்தைகளே, நாமும் சகேயுவைப் போல தேவனுடைய காரியங்களில் ஆர்வமுடையவர்களாய் தேவனை அறிந்த நாம் நம்முடைய செயல்களில் அவரை மகிமைப்படுத்துவோம். அப்படிச் செய்வீர்களா?

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## தேவ திட்டத்தில் சாத்தானின் குறுக்கீடு

1. *பாவமில்லா மனுக்குலத்தை பாவத்திலே வீழ்த்தும்படியாய் தேவகட்டளையை மாற்றி, ஏவாளிடம் வஞ்சனையான வார்த்தைகளால் பேசி வீழ்த்தினான். (ஆதி. 3).*
2. *யோபுவின் பக்தி வாழ்க்கையில் பாதகம் ஏற்படுத்த தேவ சமூகத்திலே தேவனிடத்திலேயே சவால் விட்டுப் பேசினான் (யோபு. 1,2).*
3. *பாவிளுக்கான மீட்பைக் கொடுக்கும்படியாக வந்த இறை மைந்தன் இயேசு 40 நாள் உபவாசம் இருந்த பின்பு, அவருக்கு மிகுந்த பசி உண்டாயிற்று. அப்போது அவரின் இறைத் தன்மையை சோதிக்கும்படியாக அவரோடு பேசினான் (மத். 4)*

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்**

**அன்பானவர்களே!**

சென்ற மாதத்தில் அப்போஸ்தலரான பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் 4ம் அதிகாரம் வனசங்கள்21 தொடங்கி 31 வரை வாசித்து அதின் விளக்கத்தைப் பார்த்தோம். சுருக்கமாக அல்லது ஏறக்குறைய பழைய ஏற்பாட்டை கைகொள்ளுகிறவர்களை இஸ்மவேலின் சந்ததியாக ஒப்பிட்டுப் பேசுகிறார். ஆகவே, இன்றைக்கு பழைய ஏற்பாட்டை கைக்கொள்ளுகிறவர்கள் இஸ்லாமியராக இருக்கிறார்களே யொழிய அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை என்பதை திட்டமாகப் பரிசுத்த ஆவியானவர் விளக்குகிறார். ஏன் இவ்வளவு கடுமையான உதாரணத்தைப் பயன்படுத்துகிறார். ஏனென்றால், அதற்கு அத்தனை முக்கியத்துவம் இருக்கிறது. இதனை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆகையால், கலா. 4:21ல் ஒரு கேள்வியைக் கேட்டு அதற்குப் பதிலாக இந்த உதாரணத்தைக் கொடுக்கிறார்.

அதன்படி நாமும் இனிமேல் இந்த பாடத்திற்கு சம்மந்தமாக கேள்வி கேட்டு, அதற்குப் பதில் தேடும் வகையில் இந்த பாடத்தை கடந்து செல்வோம். இந்த முறையினால் நமக்கு தேவன் போதிக்க விரும்புகிற கருத்துக்கள் எளிதாக மனதிலே பதிய நல்ல வாய்ப்பாக இருக்கும் என கருதுகிறேன். முதலாவது கேள்வியாக; ஏன் தேவன் கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி கொடுக்கவில்லை அல்லது கட்டளையிடவில்லை? ஏனென்றால், நியாயப்பிரமாணத்தில் பிழையிருந்ததாக வேதாகமம் கூறுகிறது. "அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்த தானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே" [எபி. 8:7]. இந்த வசனத்தில் "முதலாம் உடன்படிக்கை" என்று சொல்வது மோசேயின் மூலம் சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண சட்டங்களைக் குறிக்கிறது. "இரண்டாம் உடன்படிக்கை" என்பது இயேசு கிறிஸ்து வானவர் தம் சொந்த இரத்தத்தைச் சிந்தி உருவாக்கின புதிய ஏற்பாட்டைக் குறிக்கிறது.

இதன்படி பார்த்தால் முதலாம் உடன்படிக்கையில் பிழையிருந்தது என்று வேதம் சொல்கிறது. நாம் கவனமாக வேதத்தை ஆராய்ந்தால் அந்தப் பிழைகள் என்ன என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

1. கலாத். 3:12ன்படி நியாயப்பிரமாணத்தில் விசுவாசம் ஒரு சட்டமாக அல்லது பிரமாணமாகச் சொல்லப்படவில்லை. "நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான் ".

2. உபா. 28:1-14ல் நியாயப்பிரமாணச் சட்டங்களுக்குக் கீழ்படியும் போது, அல்லது அந்தச் சட்டங்களைக் கைக்கொள்ளும்போது வரக் கூடிய ஆசீர்வாதங்கள் எல்லாம் பூமிக்குரிய ஆசீர்வாதங்களாகவே இருந்தது.

3. கலாத். 3:11ன்படி நியாயப்பிரமணத்தைக் கைகொண்ட மனிதர்களில் ஒருவரும் தேவனிடத்தில் நீதிமானாகவில்லை, "நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறதே". ஏன் அவர்களில் ஒருவரும் பரிபூரணமான நீதிமானாகவில்லை? ஏனென்றால், அதிலே விசுவாசம் இல்லாததும், பரலோகத்தைப் பற்றிய நிச்சயமான நம்பிக்கை அவர்களுக்கு இல்லாததுமே; பூமிக்குரிய ஆசீர்வாதங்களே அவர்கள் குறிக்கோளாக இருந்ததினால் அவர்களில் யாரும் பரிபூரண நீதியை அடையாமல் போனார்கள்.

தேவனுடைய நீதி என்பது என்ன? விசுவாசத்தோடு தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் அதாவது, தேவன் இன்றைக்கு நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகளுக்குப் பரிபூரணமான இருதயத்தோடு கீழ்ப்படிவதாகும். இதை அவர்கள் செய்தார்களா என்றால் யாரும் செய்யவில்லை.

4. அவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட மிருகபலிகள் அவர்களுடைய பாவங்களை முழுமையாக மன்னிக்கவில்லை. இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர்: "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே" [எபி. 10:4]. அப்படியானால், தேவன் ஏன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த பலிகளைக் கட்டளையிட்டார்? அந்த பலிகள் ஏன் முழுமையான மன்னிப்பைக் கொடுக்க முடியவில்லை என்பதை நாம் பிறகு விபரமாக கவனிக்கலாம்.

5. பழைய ஏற்பாடு ஒன்றையும், அதாவது ஒரு ஆத்துமாவையும் பரிபூரணப்படுத்தவில்லை என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை [எபி. 7:19]. ஆகையால், அவர்கள் பரிசுத்தத்திலும் பரிபூரணம் அடையாதவர்களாயிருந்ததினால் தேவனைத் தரிசிக்கும் அளவுக்குத் தகுதி பெறவில்லை. "....பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" [எபி. 12:14].

6. நியாயப்பிரமாணம் மனித பிரதான ஆசாரியர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் வயதாகிறதினால் மரித்துப் போனார்கள், ஆகையால், மாறிப்போனார்கள். மேலும், அவர்கள் பாவம் செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருந்தார்கள் [எபி. 7:23]. அவர்கள் முன்பு சொந்தப் பாவங்களுக்காகப் பலி செலுத்தினார்கள் என்றும் அவர்கள் பெலவீனமுள்ள மனித பிரதான ஆசாரியர்களாயிருந்தார்கள் என்றும் எபி. 7:27,28 வசனங்கள் தெளிவுபடுத்துகிறது.

7. மேலும், நியாயப்பிரமாணம் பரலோகத்தை வாக்குத்தத்தமாகக் கொண்டிராமல், பூமிக்குரிய கானான் தேசத்தை வாக்குத்தத்தமாக கொண்டிருந்தது. பூமிக்குரிய தேவாலயத்தையும் மனிதர்களை ராஜாக்களாகவும் கொண்டிருந்தது. அந்த ராஜாக்கள் பாவம் செய்கிறவர்களாயிருந்தது மட்டுமல்லாமல் முழு தேசத்தையும் தேவனுக்கு விரோதமாகவும், தேவன் கோபமடையும்படியாகவும் நடத்தினார்கள் என்பதற்காக தேவன் மனித ராஜாக்களை அவருடைய கோபத்திலே கொடுத்து,

அவருடைய உக்கிரத்திலே அவர்களை எடுத்துக்கொண்டார், [ஓசியா 13:9,11] பூமிக்குரிய கட்டிடம் தேவாலயமாக இருந்ததற்காக அவர்களுடைய விசுவாசம் அல்லது நம்பிக்கையை தேவாலயத்தில் வைத்தார்கள். அநேக தடவைகளில் அதை அவர்கள் தீட்டுப்படுத்தினார்கள். ஆகையால், தேவன் தீயினால் சுட்டெரித்து அந்தத் தீட்டை விலக்க வேண்டியதாயிருந்தது.

தேவன் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்த பழைய ஏற்பாட்டு சட்டங்களை அடிக்கடி மீறியதால், அந்தச் சட்டங்களை அவர்கள் அவமாக்கிப் போட்டார்கள் "...ஏனெனில், நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார் " [எரே. 31:22; எபி. 8:9]. ஆகையால், அவர்களைப் புறக்கணித்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பழைய உடன்படிக்கையையும் முடிவுக்கு கொண்டு வர தேவன் திட்டமிட்டு எரேமியா தீர்க்கதரிசியின் காலத்திலேயே புதிய உடன்படிக்கையை தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார்.

9. பழைய உடன்படிக்கை "இஸ்ரவேல் ' என்கிற ஒரே ஒரு சந்ததிக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. ஆகையால், இந்த உடன்படிக்கையின் மூலம் முழு உலகத்திற்கும் இரட்சிப்பு வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை. "மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி; ".....அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" என்றான் [உபா. 5:1,3]. இந்த வசனங்களில் நாம் தெரிந்து கொள்ளுகிற கருத்து என்னவென்றால், பழைய ஏற்பாடு அல்லது உடன் படிக்கை முற்பிதாக்களாகிய ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யூதா, யோசேப்பு போன்றவர்களோடு பண்ணவில்லை. மேலும், சீனாய் மலையண்டை நின்றிருந்த இஸ்ரவேலரோடு மட்டும் இதைச் செய்தார் என்று உறுதியாகச் சொல்லும் போது புறஜாதிமக்களோடு தேவன் இந்த உடன்படிக்கையைச் செய்யவில்லை என்பதையும் மறைமுகமாகத் தெளிவுபடுத்துகிறது. ஆகையால், பழைய ஏற்பாடு இஸ்ரவேலர் / புறஜாதிகள் என்கிற மிகப்பெரிய பிரிவினையை உலகத்தில் ஏற்படுத்தி வைத்திருந்தது. இதைச் சுவர் என்று பவுல் கூறுகிறார், ".... பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து", [எபே. 2:14] ஆகையால், இந்த பிரிவினையை நீக்கவும் இயேசு உலகத்தில் வந்தார்.

10. மன்னிப்பு இல்லாததற்காகவும் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டிருந்த ஒரு கடுமையான சட்டத்திற்காகவும் அவர்களில் ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாக முடியாமல் போனார்கள் [எபி. 10:4; கலா. 3:11] அதென்னவென்றால், "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைகொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்", [யாக். 2:10] ஓர் இஸ்ரவேலன் தன் வாழ்நாள் முழுவதும் எல்லாச் சட்டங்களையும் கைகொண்டிருந்து அவன் மரிக்கும் தருவாயில் தவறுதலாக ஒரு சட்டத்தை மீறி விட்டால், அவன் எல்லா சட்டத்தையும் மீறியதாக கணக்கிடப்படும். அதுமட்டுமல்ல அதிலிருந்து மன்னிக்கப்பட்டு அந்த பாவத்திலிருந்து அவனால் வெளியில் வர முடியாது. அவன் பாவியாகத்தான் மரிக்க வேண்டும். இதைத்தான் நுகத்தடி என்று வேதம் விளக்குகிறது அல்லது சுட்டிக்காட்டுகிறது [அப். 15:10; கலா. 5:1].

[எச்சரிக்கை : புதிய ஏற்பாடு பாவம் செய்வதற்கு அனுமதிக்க வில்லை, சில கட்டளைகளை கைக்கொள்ளாமல் விட்டுவிடலாம் என்றும் போதிக்கவில்லை, அறியாமல் செய்கிற பாவத்திற்கு மன்னிப்பு உண்டு. [1 யோவா. 2:1; 3:9; 5:16; 1:9]. எது அறியாமல் நடந்தது; எது அறிந்து நடந்தது என்பதை தேவன் அறிவார். ஆகையால், நாம் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருக்க வேண்டும் என்று வேதம் போதிக்கிறது].

11. "நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள்..." யாத். 19:6 என்கிற இந்த ஒரு வாக்குத்தத்தம் தவிர மற்ற அனைத்து வாக்குத்தத்தங்களும் பூமிக்குரிய வாழ்க்கையின் மேன்மை யையோ அல்லது முன்னேற்றத்தையோ தான் நோக்கமாகக் கொண்டி ருந்தது. ஆகையால், இஸ்ரவேலர் அல்லது யூதர்கள் தங்களுடைய பூமிக்குரிய வாழ்க்கையை செல்வமிக்கதாகக் காட்டத் தொடங்கி னார்கள். அதாவது, தாங்கள் பணக்காரர் ஆவதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். தேவனுடைய உடன்படிக்கையைக் கைக் கொண்டால் அவர் அவர்களை ஆசீர்வதிப்பார் என்பதற்குப் பதிலாக எப்படியாவது [குறுக்கு வழியில் அல்லது அநீதியாகக் கூட] பணக் காரராக ஆகிவிட்டால், நான் தேவனுடைய சட்டத்தை ஒழுங்காகக் கை கொள்கிறேன் ஆகையால், தேவன் என்னை ஆசீர்வதித்து விட்டார் என்று மக்களிடத்திலே தன்னை நீதிமானாகக் காண்பிக்கலாம் என்கிற தவறான அல்லது தேவனுக்கு விரோதமான கொள்கையைக் கொண்ட வர்களாக மாறிப்போனார்கள். இதன் காரணமாக இஸ்ரவேல் தேசத்தில் திருடு, கொள்ளை, கொலை, மோசம் போக்குதல், கோபம், சண்டை கள், தவறான வைராக்கியங்கள் என்று மென்மேலும் ஆழமான பாவத்திற்குள்ளாக சென்றுவிட்டார்கள் ஏறக்குறைய எல்லோரும் பொருளாசைக்காரர்களாக மாறிப்போனார்கள்.

12. அவர்களுடைய [இஸ்ரவேலருடைய] நம்பிக்கை பூமிக்குரிய வைகளின் மேல் அதிகமாய் போனதற்காக அவர்கள் செய்த உபவாசமும், செலுத்தின பலிகளும், காணிக்கைகளும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றாமல் அல்லது தேவனுக்கு பிரியமானவைகளாக இல்லாமல் போனது. உபவாசம், பலிகள், காணிக்கை போன்றவைகளை தங்கள் பூமிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக ஒரு லஞ்சம் போல தேவனுக்குச் செலுத்தினார்கள் என்பது போல் காணப்படுகிறது. [ஏசாயா 58:37; 1:10,17] ஆகையால், தேவன் அவைகளை நிறுத்தும் படியாகவும், மாற்றிக் கொள்ளும்படியாகவும் கட்டளையிடுகிறார். இவற்றைக் குறித்து கர்த்தருக்குச் சித்தமானால் பிற்காலங்களில் விபரமாக கவனிக்கலாம். இதே நோக்கம் இன்றைக்கும் அநேகரிடத்தில் காணப்படுகிறது. அதைத் தேவன் ஏற்றுக்கொள்வாரா என்று சிந்தித்துப் பாருங்கள்.

13. சீனாய் மலையில் பழைய ஏற்பாடு கொடுக்கப் போவதற்கு முன்பே, இயேசு கிறிஸ்துவும் அவரால் ஏற்படுத்தப்படப் போகிற புதிய ஏற்பாடும் தேவனால் திட்டமிடப்பட்டு பிதாக்களுக்குத் தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தப்பட்டது. இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் கலாத்தி யருக்கு எழுதியுள்ளார். [கலா. 3:16,19 வசனங்களை நன்கு பொறுமை யாக வாசித்து அதின் கருத்தை ஆராய்வோமானால், வாக்குத் தத்தத்தில் எது முதல், எது இரண்டாவது என்பது நமக்குத் தெளிவாகும் ஆதி. 3:15ல் தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்துப் பேசும் போது, கிறிஸ்து

ஸ்திரீயின் வித்தாக வருவார் என்று முன் கூறினார். ஆதி. 22:1,18ல் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தன் வாக்குத்தத்தமான மகன் ஈசாக்கை பலி செலுத்தும் போது, தடை செய்த தேவன் உன் சந்ததிக்குள் என்று ஒருமையில் பேசினார். அந்த ஒருவர் ஈசாக்கு அல்ல, அவர் கிறிஸ்து என்று கலாத். 3:16 கூறுகிறது. இப்படியிருக்க கிறிஸ்துவும் அவரால் வரக் கூடிய புதிய உடன் படிக்கையால் [புதிய ஏற்பாட்டால்] எல்லா ஜாதி களுக்கும் ஆசீர்வாதம் வரும் என்கிற உலகம் அனைத்திற்குமான இரட்சிப்பின் ஆசீர்வாதம் ஆபிரகாமின் காலத்திலேயே வாக்குத்தத்தமாக முன் கூறப்பட்டது. அந்த நாட்களில் பழைய ஏற்பாடு [பழைய உடன் படிக்கையாகிய நியாயப் பிரமாணம்] கொடுக்கப்படவில்லை. சீனாய் மலைக்கு முந்தைய காலம் பிதாக்களின் காலம் ஆகும். இந்தப் பிதாக் களின் காலம் ஏறக்குறைய 2500 வருடங்கள், [வேதாகம ஆய்வின்படி]. ஆகையால், சீனாய் மலை தொடங்கி கிறிஸ்துவின் சிலுவை வரைக் கும் பழைய ஏற்பாட்டின் காலம். இது சுமார் 1500 வருடங்கள் சிலுவைக்கு பிறகு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின் காலம் இது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. ஆக பழைய ஏற்பாடு சீனாய் மலையில் கொடுக்கப் படுவதற்கு முன்பே புதிய ஏற்பாடு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கையை ஸ்தாபிக்கப் போகிற ஸ்தாபகர் இயேசு கிறிஸ்து [மேசியா] இந்த உலகத்தில் வரும் வரைக்கும் இருந்த இடைபட்ட காலத்தில் மேசியா பிறந்து வரும் சந்ததியான இஸ்ரவேல் சந்ததியை பரிசுத்தமாக வைப்பதற்கு அவர்களுக்கு பழைய ஏற்பாடு கொடுக்கப்பட்டது. அதில் 10 கோத்திரங்கள் [வட ராஜ்யம்] பரிசுத்த மில்லாமல் கலந்து சிதறிப்போனார்கள். மீதி இரண்டு கோத்திரங்களான யூதா, பென்யமீன் [தென் ராஜ்யம்] கிறிஸ்துவின் பிறப்பு வரை அல்லது தேவனுடைய ராஜ்யம் பெலமாக ஸ்தாபிக்கப்படும் வரை அநேக சோதனைகளின் நடுவில் சகித்திருந்தார்கள். கி.பி. 70ல் தேவாலயம் அழிக்கப்பட்டு பிறகு பெலவீனப்பட்டுப் போனார்கள். ஆகையால், பரிசுத்த ஆவியானவர் கலாத்தியருக்கு எழுதும்போது புதிய ஏற்பாட்டின் காரியங் கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு [ஆபிரகாமின் நாட்கள் இது கி.மு. 2000] அது நடைமுறைக்கு வரும் வரை [கி.பி. 33 சபை அல்லது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை] இடையிலே தற்காலிகமாக கொடுக் கப்பட்டது. பழைய உடன்படிக்கை அது நிலையானது அல்ல. சிலர் நித்தியமானது என்கிற வசனப்பகுதியை சுட்டிக் காட்டுவார்கள். தேவனை ஆராதிப்பது நித்தியமானது. ஆனால், முறைமாற்றப்பட்டது.

14. எபி. 7:11-18 வரை நாம் நிதானமாய் வாசித்தால் ஒரு மிகப்பெரிய உண்மை விளங்கும்; அதில் கிறிஸ்து லேவி கோத்திரத்தில் பிறக்க வில்லை என்பது விளங்கும். அவர் யூத கோத்திரத்தில் பிறந்தார். யூதா கோத்திரத்தில் பிறந்த இயேசுவால் நியாயப்பிரமாணத்திற்கு ஆசாரியராக இருக்க இயலாது. அப்படி இயேசுவானவர் பழைய ஏற்பாட்டிற்கு ஆசாரி யராக இருந்தால் குற்றவாளியாவார். ஆகையால், கிறிஸ்துவானவர் ஆசாரிய ஊழியத்தை மாற்றி அதாவது ஆரோனுடைய ஆசாரியத்து வத்தை மாற்றி மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தைக் கொண்டு வந்தார். ஆசாரியத்துவம் மாற்றப்பட்டதால், உடன்படிக்கையும் முற்றிலு மாக மாற்றப்பட வேண்டியதாயிற்று. இதுவும் பழைய உடன்படிக்கையை நீக்கி புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவது அவசியம் ஆயிற்று.

15. ரோமர் 7:1-4 இந்த வசனங்களின் அடிப்படையில், போதிக்கிற வாழ்க்கை நெறியின்படி தேவனுடைய தீர்மானத்தின்படி ஒரு பெண்ணுக்கு ஒரே நேரத்தில் இரண்டு கணவர்கள் [உடன்படிக்கைகள்]

இருக்க முடியாது என்பதைப் போல, ஒருவர் ஒரே நேரத்தில் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் உடையவராக இருக்க முடியாது. ஒருவர் இப்படி சொல்லலாம்; நான் புதிய ஏற்பாட்டை [உடன் படிக்கையை]க் கைகொள்ளுகிறேன். அதே நேரத்தில் பழைய ஏற்பாட்டில் [உடன்படிக்கையில்] சிலதையும் கைகொள்ளுகிறேன் என்று. ஆனால், தேவன் அதை ஏற்றுக்கொள்கிறாரா? சத்தியம் அதை அங்கீகரிக்கிறதா? என்றால் பதில் இல்லையென்று தான் வரும். ஆகையால், நாம் ஒரே நேரத்தில் இரண்டு உடன்படிக்கைகளை கைக் கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் ஒரே நேரத்தில் ஒரு பெண்ணை இருவர் திருமணம் செய்தது போல ஆகும். இது விபச்சாரம் என்று பரிசுத்த ஆவியானவர் கடிந்து கொள்வதோடு, இஸ்ரவேலர் அல்லது யூதர்கள் பழைய உடன்படிக்கைக்கு மரித்து புதிய உடன்படிக்கைக்கு முழுமையாக வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்.

நிறைவாக: மேற்சொன்ன காரணங்களுக்காகவும் இன்னும் தேவனுடைய தீர்மானத்தின்படியும், நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாடு முடிக்கப்பட வேண்டும் அல்லது ஒழிக்கப்பட வேண்டும். அது எப்படி நடந்தது? அல்லது நடந்ததா இல்லையா என்பதை அடுத்த மாதம் கவனிப்போமாக!. ❋

**(தொடரும்)**

## நாளும், நடப்பும்

1. கர்நாடக மாநில முதல்வர் மூன்றாவது முறையாக மாற்றப் பட்டுள்ளார்.
2. குடியரசுத் தலைவர், துணைத்தலைவர் தேர்தலில் வடக்கு, தெற்கு பார்க்க வேண்டியதில்லை - முன்னாள் முதல்வர்
3. தமிழக நகரங்களில் வழக்கத்துக்கு மாறாக வெயில் நீடித்துக் கொண்டிருக்கிறது.
4. பருத்தி வரத்துக் குறைவால் நூல் விலை 10% உயர்வு
5. குரூப்-4 தேர்வு : தமிழகத்தில் 10 லட்சம் பேர் எழுதியுள்ளனர்.
6. காந்திஜியின் ஆவணங்களை மீடக ஏல நிறுவனத்துடன் மத்திய அரசு ஒப்பந்தம்.
7. விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் ரோஜர் பெடரரும், செரீனா வில்லியம்சும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

# ஒரு சபை பல இடங்களில்

*Royce Frederick*



**பு**திய ஏற்பாடு " சபை " மற்றும் " சபைகள் " என்கிற பதங்களை பயன்படுத்துகிறது. கிறிஸ்து அநேக சபைகளைக் கட்டினாரா அல்லது ஒரே ஒரு சபையை மாத்திரம் கட்டினாரா?

முதலாவது, " சபை " என்பதன் பொருளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப் பட்டது. சபை என்பது கிரேக்க வார்த்தையான "எக்லீசியா"விலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் பொருள், " அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்" என்பதாகும். இது வெளியே அழைக்கப்பட்டு *ஓரிடத்தில் ஒன்றாகக் கூடின மக்களைக் குறிக்கிறது.* உதாரணமாக, எபேசு பட்டணத்துச் சம்பிரதியானவன் இவ்விதமாகச் சொன்னான். "*நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக் குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாய சங்கத்திலே தீர்க்கப்படும்*" என்று [அப். 19:39].

சபை என்பது மக்கள் தான், அது மனிதர்களால் உண்டாக்கப்பட்ட ஒரு கட்டிடம் அல்ல. சபை என்பது கிறிஸ்தவர்களாலும், கிறிஸ்துவாலும் உண்டானது. பாவிகள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது அவர்கள் கிறிஸ்தவர்களாகிறார்கள் [அப். 2:3641; 11:26]. எவ்விடத்திலுமுள்ள உண்மையான கிறிஸ்தவர்களெல்லாரும், கிறிஸ்து அவர்களுக்குத் தலையாயிருக்கும் போது அந்த இடத்தில் அவர்கள் "சபை" ஆக இருக்கிறார்கள் [அப். 2:47; 5:11; 14:23,27; ரோமர் 16:5; பிலேமோன் 2; எபே. 1:22,23].

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் வனாந்தரத்தில் சபையாக [எக்லீசியா] இருந்தது [அப். 7:38]. அங்கே அந்த ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டார்கள். ஆனால், வனாந்தரத்தில் தனித்தனியாக அலையும்படியாக அல்ல. தேவனுடைய தேசமாக கானானுக்கு சேர்ந்து போகும்படியாகவே அழைக்கப்பட்டார்கள்.

நாமும் பாவத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் ஜீவியங்களிலே தனித்தனியாகப் பிரிந்து அலையும்படியாக அல்ல. ஆனால், கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாகி இணைந்து பரலோகத்தை நோக்கிப் பயணிக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் கர்த்தர் சபையை [கிறிஸ்தவர்களை] வாரத்தின் முதல் நாள்தோறும் கூடி

தேவனை ஆராதிக்கும்படியாகவும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும் படியாகவும் கட்டளையிடுகிறார் [அப். 20:7; 1 கொரி. 16:1,2; எபி. 10:23-25]. அவர், மனித உடலின் உறுப்புகளைப் போல் நாமும் ஒத்துழைக்க வேண்டுமென்று போதிக்கிறார் [ரோமர் 12:3-8]. "*ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேது வாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது*" [எபே. 4:16] மக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது சபை வளர்கிறது [அப். 2:47; 4:4; 5:14; 6:7] அது மட்டுமல்லாமல், சபை அங்கத்தினர்கள் தேவனுடைய வார்த்தையை அதிகமாகக் கற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படியும் போதும் சபை வளர்கிறது [எபி. 5:1214].

நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வெவ்வேறு மார்க்கப்பிரிவினைச் சபைகளில் சிதறியிருக்கும்படியாக அல்ல, மாறாக, ஒரே சரீரத்தில் இணைக்கப்பட்டு கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றும்படியாகவே பாவத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு மரிப்பதற்கு முன்பாக அந்த இராத்திரி வேளையிலே இவ்விதமாகச் ஜெபித்தார். "*அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்*" [யோவா 17:21].

எனவே, ஒரு விதத்தில் கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு சபைதான் உண்டு. அவர் ஏராளமான சபைகளை ஆரம்பிக்கவில்லை. மார்க்கப் பிரிவினை சபைகள் பொதுவாக மனிதனால் உண்டாக்கப்பட்டு, மனிதப் பெயர்களைத் தாங்கி, மனித உபதேசங்களைப் பின்பற்றுகிறது. கிறிஸ்து ஒரே சபையைக் கட்டுவதாகத்தான் வாக்குத்தத்தம் செய்தார் "*.....நான் என் சபையைக் கட்டுவேன்.....*" [மத். 16:18] சபை கிறிஸ்துவின் "சரீரமாயிருக்கிறது" [எபே. 1:22,23] மனித சரீரத்தைப் போல கர்த்தருடைய சபைக்கும் ஒரே தலையும், ஒரே சரீரமும் உண்டு. கிறிஸ்து அநேக மார்க்கப் பிரிவினைச் சபைகளுக்குத் தலைவராக இல்லை. "*ஒரே சரீரமும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் உண்டு.....*" [எபே. 4:4,5]. கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட நம்பிக்கைகளின் தொகுப்பாகிய ஒரே விசுவாசத்தை நாம் தொடர்ந்து பின்பற்றினால் அவருடைய சபையின் அங்கமாக நாம் தொடர்ந்து இருப்போம். ஆயினும், வேதாகமம் "சபைகள்" என்றும் பேசுகிறது. [கலா. 1:2] *கலாத்தியா நாட்டு சபைகள்* என்பது, பல பிரிவினைச் சபைகளைக் குறிக்கும் வார்த்தை அல்ல. மாறாக, கலாத்தியா நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்த கிறிஸ்துவின் சபைகளையே குறிக்கிறது. அவைகள் ஒரே விதமான உபதேசத்தைப் போதித்தன, பவுல் எழுதும் போது, இவ்விதமாக எழுதுகிறார். "*சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்*

*சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லு கிறேன்* " [1கொரி. 1:10] மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைப் பெயர் களும், மனிதனால் உண்டாக்கப்பட்ட உபதேசங்களும் பிரிவினையை உண்டாக்கும். நாம் மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்றினால் நம் ஆராதனை வீணான ஆராதனையாகிவிடும் [மத். 15:9]. ஆனால், கிறிஸ்துவின் உபதேசத்தில் நாம் நிலைத்திருந்தால், நாம் உண்மை யாகவே அவருடைய சீடர்களாயிருப்போம் [யோவா 8:31,32]. "*கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன்* " [II யோவா 9].

நாம் கலாத்திய நாட்டில் இல்லையென்றால், நாம், " கலாத்தியா நட்டிலுள்ள சபைகள்" என்று அழைக்கப்பட முடியாது. ஆனால், சுவிசேஷத்திற்கு உண்மையாகக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவைப் பின்பற்று கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார்கள் [ரோமர் 8:1; 6:3,4] இந்த உலகில் எங்கிருந்தாலும் கிறிஸ்துவை உண்மையாகப் பின் பற்றுகிற சபையார் தான் கிறிஸ்துவின் சபையார்கள் என்று அழைக்கப் படுகிறார்கள் [ரோமர் 16:16].

## இளைஞர்களுக்கான ஞானியின் அறிவுரைகள்

### நீதிமொழிகள் 1–10

| | | |
|---|---|---|
| 1. | ஞானத்தைப் பெற்றுக்கொள்ள தேவனுக்குப் பயப்படு | (நீதி. 1:7). |
| 2. | நீதிமான்களின் பாதையில் உன்னை நடத்து. | (நீதி. 2:20) |
| 3. | சுயபுத்தியின்மேல் சாயாமல் கர்த்தரை நம்பு | (நீதி. 3:5). |
| 4. | உன் பெற்றோருக்குக் கீழ்ப்படி | (நீதி. 3:11) |
| 5. | துன்மார்க்கருடைய பாதையில் நடக்காதே | (நீதி. 4:14–19) |
| 6. | உன் இருதயத்துக்குக் காவல் வை | (நீதி. 4:23) |
| 7. | சோம்பேறித்தனத்துக்கு விடை கொடு | (நீதி. 6:6) |
| 8. | கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களுக்கு விலகியிரு | (நீதி. 6:17–14) |
| 9. | கட்டளைகளையும், போதகத்தையும் கண்ணின் மணிகளைப் போல் காத்துக்கொள் | (நீதி. 7:20) |
| 10. | மோசமான பெண்களுக்கு முற்றிலும் விலகியிரு | (நீதி. 7:15–27) |

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 21 மேலான அதிகாரம்

**Bro. K. பாஸ்கர்**

**அ**ன்பான திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். இம்மாதத்திலும் இந்தத் தொடர்கட்டுரையின் மூலமாய் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தொடர் கட்டுரையை நீங்கள்படித்து வருவதால் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொண்டு வருகிறீர்கள். அதன்படி இம்மாதத்திலும் மேலான அதிகாரம் அதாவது மனித அரசாங்கம் என்ற பாடத்தின் மூலமாக இன்னும் தெளிவான சத்தியத்தை அறிந்து கொள்வோம்.

### I. மேலான அதிகாரம் தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கிறது

தேவனுடைய பிள்ளைகள் மேலான அதிகாரம் கொண்டிருக்கிற மனித அரசாங்கத்தோடு எவ்வாறு தொடர்பு வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த அரசாங்கம் தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கின்றதா என்று வேதத்தைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படி ஆராய்ந்து பார்க்காமல் மேலான அதிகாரங்கள் எல்லாம் அதாவது மனித அரசாங்கங்கள் எல்லாம் பிசாசினால் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று தவறாக நினைக்கக் கூடாது. யெகோவா சாட்சி என்ற பிரிவுக் கூட்டத்தார் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே சத்தியத்தை அறிந்து தவறிலிருந்து விடுதலை அடைவோம்.

ஆதியிலே தேவன் மனுஷனைப் படைத்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். [ஆதி. 1:28] தேவன் மனுஷனை ஆளும்படி கட்டளை கொடுத்தார். அதன்படி இன்றும் நடந்து வருகிறது. இதைத் தான் தானியேல் தீர்க்கதரிசி பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சாரிடம் ராஜாவே நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர் பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும், பராக்கிரமத்தையும், வல்லமையையும், மகிமையையும் அருளினார். சகல இடங்களிலுமுள்ள மனுப்புத்திரரையும், வெளியின் மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார் என்று தெரிவித்தார் [தானி. 2:37,38].

பரலோகத்தின் தேவன் காலங்களையும், சமயங்களையும் மாற்றுகிறவர், ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் என்று தீர்க்கதரிசி தானியேல் தெரிவித்தார். [தானி. 2:21] மேலும் புதிய ஏற்பாட்டில் .... தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை

உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது [ரோமர் 13:1] என்று கூறியிருக்கிறது. எனவே, மேலான அதிகாரம் தேவனால் உண்டாயிருக்கிறது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

## II. மேலான அதிகாரம் நன்மைக்காக உண்டாயிருக்கிறது

தேவன் இந்த உலகத்தைப் படைத்து அதை ஆளும் பொறுப்பை மனிதனுக்குக் கொடுத்தார். அது நல்லது என்று கண்டார் [ஆதி. 1:28,31] மேலான அதிகாரம் ஜனங்களுக்கு நன்மையைக் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆட்சியாளர்கள் நல்லவர்களாகவும் இருக்கலாம் அல்லது கெட்டவர்களாகவும் இருக்கலாம் துர்க்கிரியை களுக்கு பயங்கரவாதிகளாகவும் இருக்கலாம் [ரோம. 13:3] ஆனால், அவர்கள் நாட்டுக்கு நல்ல சட்டங்களைக் கொடுக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். விசேஷமாக அவருடைய சுவிசேஷம் உலக மெங்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்றே விரும்புகிறார் [மாற். 16: 15,16]. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமான சட்டங்களைக் கொண்டு வரும்போது அந்த ராஜ்யத்தையும் அதின் செல்வாக்கையும் அழிக்கின்றார்.

உதாரணமாக, எகிப்து தேசம் இஸ்ரவேலருக்கு அடைக்கலமாக இருக்கும் போது அந்தத் தேசத்தை செழிக்கும்படிச் செய்தார் [ஆதி. 41:40,57] தேவனுக்கு விரோதமாகச் செயல்படுகின்ற போது எகிப்து தேசத்தையும், அதின் செழிப்பையும் தேவன் அழித்தார் [எசே. 29:8,10]. இப்போது எகிப்து எந்த நாட்டையும் ஆட்சி செய்யவில்லை. இறந்து போனவர்களுக்கு பிரமிடுகளைக் கட்டி [கல்லறைகளை] அவை களைத்தான் ஆட்சி செய்கின்றது. அதுபோல உலகத்தை ஆட்சி செய்த பாபிலோன், மேதிய பாரசீகம், கிரேக்க சாம்ராஜ்யம் பின்பு கடைசியாக ஆட்சி செய்த ரோமப் பேரரசு, இந்த வல்லரசுகள் இப்போது இல்லை. தேவனுடைய சுவிசேஷத்திற்கு தடைவிதித்தன ஆகவே, தேவன் அவைகளை எல்லாம் அழித்தார். குறிப்பாக ரோமப் பேரரசில் கொடுங் கோல் மன்னன் நீரோ [கி.பி. 54-68] வெஸ்பாசியன் [கி.பி. 69-79] தீத்து ராயன் [கி.பி. 79-81] டொமீஷியன் [கி.பி. 81-19] போன்றவர்கள் கிறிஸ்தவர்களை மிகவும் கொடுமைப்படுத்தி, அப்போஸ்தலர்களை இரத்தம் சிந்திக் கொன்றனர். ஆதலால் ரோம சாம்ராஜ்யத்தைத் தேவன் ஒன்று மில்லாமல் செய்து விட்டார். ரோமப் பேரரசின் அநியாயங்களைத் தேவன் நினைவு கூர்ந்து அதை அழித்தார் [வெளி. 14:8,18;2,5] இவைகள் எச்சரிப்பாக உள்ளது. எனவே மேலான அதிகாரம் நன்மைக் காக உண்டாயிருக்கிறது. அது சுவிசேஷ ஊழியத்திற்குத் தடை விதிக் காமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசாங்கத்தை தேவன் ஆசீர் வதிக்கிறார். நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும், கலக மில்லாமல், அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக் காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் பண்ணவேண்டும். நம்முடைய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது [1 தீமோ. 2:2,3] மேலான அரசாங்கம் நமக்கு நன்மையைக் கொடுக்கும்படியாக இருக்கிறது [ரோம. 13:4].

## III. மேலான அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்


மேலான அதிகாரங்கள் யாவும் தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரங்கள் நம்முடைய கிறிஸ்தவ வாழ்விற்கு நன்மையைக் கொடுக்கின்ற தேவ ஊழியக்காரர்களாக இருக்கின்றார்கள் என்று வேத வசனம் கூறுகின்றது என்பதைக் கவனியுங்கள். எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கும், கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான் அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்.... உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன் தேவன் ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு. பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை. தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி அவன் நீதியை செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும் என்று வேத வசனம் கூறுகின்றது [ரோ. 13:1-5].

ஆனால், நம்மில் சிலர் அரசாங்கச் சட்டங்களை மதிக்காமல் அதை மீறுகிறவர்களாக இருக்கின்றார்கள். எப்படியெனில், லைசென்ஸ் இல்லா மல் பைக், கார், வேன் போன்றவற்றை ஓட்டுகின்றனர். மூன்று பேர்கள் இரண்டு சக்கர வாகனங்களில் சென்று ஊழியம் செய்கின்றனர். சிலர் அரசாங்கத்திற்கு தெரியாமல் சிசு கொலை, மருந்து குடித்துத் தற்கொலை, தூக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொண்டவர்களை இரகசியமாக கிறிஸ்தவ கல்லறைகளில் புதைப்பது போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இவைகள் யாவும் அரசாங்கத்திற்கு விரோதமான பாவங்கள். இவைகள் தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்வதற்கு ஒப்பாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ள வேண்டும். [எபே. 5:11] இப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்துகிறவன் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான் [2 யோ. 9,11]. எனவே, அரசாங்கத்திற்குத் தெரியாமல் எதுவும் செய்யக்கூடாது. ஏனென்றால், அரசாங்க நியமனம் அது தேவனுடைய நியமனமாக உள்ளது. அரசாங்க சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருப்பது நமது கடமையாகும் [1பேதுரு 2:13,14].

நம்முடைய ஆண்டவராகிய இயேசு ரோம அரசாங்கத்திற்குட்பட்டு வாழ்ந்தார். அரசாங்க வரியைச் செலுத்தி அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தார். அரசாங்கத்திற்கும், அதிகாரத்திற்கும் எதிர்த்து நிற்கவில்லை [லூக். 20:22,25]. அதுபோல நாமும் அரசாங்கத்திற்கு நல்ல குடிமனாக இருந்து வரிகளைக் கட்டிக் கீழ்ப்படிந்திருப்போம் [ரோ. 13:6,7], [தீத்து. 3:1].

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| பொதிகை TV | சனி | காலை | 5:30 மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 6:00 மணி |
| தமிழன் TV | சனி | காலை | 6:15 மணி |



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |





Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




## திருமறை தியானம்


### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

தபால் செலவிற்கு பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**









## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor S. Rajanayagam